

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 210 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 28 – திங்கள்கிழமை 11 மார்ச் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 210 : Thiruvalluvar Year - 2055 - Maasi 28 - Monday 11 March 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## நகராட்சி நிர்வாகத் துறை சார்பில்

# ரூ.330.42 கோடியில் குடிநீர் உள்ளிட்ட திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 11 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 118 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 21 பணிகளை திறந்து வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 212 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 118 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 21 பணிகளை திறந்து வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 212 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ.சரவணன், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்.**

பெருங்குடி மண்டலம், மடிப்பாக்கம் பகுதிக்கு 80 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்;

அண்ணா நகர் மண்டலம், நியு ஆவடி சாலையில் 68 இலட்சம் ரூபாய் செலவில் பணிமனை-101-க்கான புதிய அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 81 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிலான 2 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பேரூராட்சிகள் இயக்ககத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம்;

தென்காசி மாவட்டம், சிவகிரி பேரூராட்சியில் 99 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட பேருந்து நிலையம்;

என மொத்தம் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவிலான 2 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்**

வேலூர் மண்டலம், சோளிங்கர், ஆரணி, திருவத்திபுரம், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் ஆகிய நகராட்சிகளில் தினசரி சந்தை மேம்பட்டுப் பணிகள், நீர்நிலை மேம்பாட்டுப் பணி, புதிய அலுவலகக் கட்டடங்கள், பூங்கா மேம்பாட்டுப் பணிகள் என 17 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவிலான 9 பணிகள்;

தஞ்சாவூர் மண்டலம், பட்டுக்கோட்டையில் 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் தினசரி சந்தை மேம்பாட்டுப் பணி;

திருநெல்வேலி மண்டலம், செங்கோட்டை, திருச்செந்தூர் ஆகிய நகராட்சிகளில் 3 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் பூங்கா மேம்பாட்டுப் பணி மற்றும் அறிவுசார் மையம்;

மதுரை மண்டலத்தில் 2 கோடி ரூபாய் செலவில் மேலூர் அரசு மருத்துவமனையில் தங்குமிடம், மானாமதுரையில் நகராட்சி அலுவலகக் கூடுதல் கட்டடம்;

என மொத்தம் 26 கோடியே 59 இலட்சம் மதிப்பீட்டில் 14 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

**ஓட்டேரி கால்வாயின் குறுக்கே புதிய பாலம்**

அண்ணாநகர் மண்டலம், வார்டு - 98ல் உள்ள ஓட்டேரி கால்வாயின் குறுக்கே ஆஸ்பிரன் கார்டன் 2வது தெருவையும், கீழ்ப்பாக்கம் தோட்டம் தெருவையும் இணைக்கும் இடத்தில் இருந்த பழைய பாலத்தை இடித்துவிட்டு, உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ், கீழ்ப்பாக்கம், அண்ணாநகர், ஐ.சி.எப். அயனாவரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 65 மீ. நீளம் மற்றும் 11.50 மீ. அகலத்தில் (இருபுறமும் நடைபாதை உட்பட) புதியதாக கட்டப்பட்டுள்ள பாலம்;

**இறகுப்பந்து விளையாட்டு அரங்கங்கள்**

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், தண்டையார்பேட்டை, சர்மா நகர், 6வது தெருவில் 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் அண்ணாநகர் மண்டலம், எல்.பிளாக் 19வது தெருவில் 16 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இறகுப் பந்து விளையாட்டு மைதானம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட விளையாட்டுத்திடல்;

என மொத்தம் 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 3 திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை பாரதி நகர் பகுதியில், 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள்;

பெருங்குடி / சோழிங்கநல்லூர் மண்டலம், பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி லிங்க் சாலை முதல் நூக்கம் பாளையம் சாலை வரை உள்ள பகுதிகளுக்கு 98 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்;

அம்பத்தூர் மண்டலத்தில் 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு 31வது தெருவில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 68வது தெருவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் பாடி மேம்பாலத்தின் அருகிலுள்ள பிரதான குடிநீர் குழாயுடன் நெகிழிரும்பு குடிநீர் குழாயினை இணைக்கும் பணிகள்;


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


---

## ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ்

# பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளைக்கு வீடு!

## உடனடியாக வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச் 11 -**

**பத்மஸ்ரீ திருமதி. சின்னப் பிள்ளை அவர்களுக்கு ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் உடனடியாக வீடு வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முன்னாள் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயி அவர்களிடம் கடந்த 2000-ஆம் ஆண்டில் “ஸ்த்ரிசக்தி” புரஸ்கார் விருது பெற்றவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பத்மஸ்ரீ திருமதி சின்னப் பிள்ளை அவர்கள். அவர் சமீபத்தில் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த



பேட்டியில் பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தில் தனக்கு வீடு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இது வரை வழங்கப்படவில்லை என்று வேதனையுடன் தெரிவித்து இருந்தார்.

இந்த செய்தியினை கேள்விப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்கு புதியதாக வீடு வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தினார்.

இதன்படி பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்கு ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்டுள்ள ஒரு செண்ட் வீட்டு மனையுடன் பில்லுச்சேரி ஊராட்சி, திருவிழாப் பட்டி கிராமத்தில் கூடுதலாக 380 சதுரஅடி நிலத்திற்கான பட்டா வழங்கப்படுகிறது.

மேலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்குப் புதிய வீடு வழங்கப்படுகிறது. வீடு கட்டும் பணி இந்த மாதமே தொடங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## பொதுப்பணித் துறை சார்பில் - சாத்தூரில்

# புதிய சுற்றுலா மாளிகை - தேனியில் கூடுதல் சுற்றுலா மாளிகை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 11-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகை ஆகியவற்றை திறந்து வைத்தார்,

**சாத்தூரில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்!**

2021-22ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், இரண்டு தளங்களுடன், 4437 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சுற்றுலா மாளிகையானது, தரைத்தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், கூட்ட அரங்கம், பொது உணவுக்கூடம், ஓட்டுநர் ஓய்வறை மற்றும் முதல் தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், இரண்டு தங்கும் அறைகள் மற்றும் காத்திருப்புக்கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**தேனியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்!**

தேனி மாவட்டம், தேனி மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ஏற்கனவே அமையப்பெற்றுள்ள சுற்றுலா மாளிகை கட்டடத்தின் முன்புறம் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டிட 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5996 சதுர அடி பரப்பளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் தரைதளத்தில் குளிர்சாதன வசதியுடன் முக்கியஸ்தர்களுக்கான நான்கு அறைகளும், விருந்தினர்களுக்கான நான்கு அறைகளும், என மொத்தம் எட்டு அறைகள், சமையலறை, உணவருந்தும் அறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கூடுதல் சுற்றுலா மாளிகையானது அமைச்சர் பெருமக்கள், நீதியரசர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் தங்குவதற்காக உரிய வசதிகளுடன் இயற்கை சூழலுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், பொதுப் பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றிய இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகங்களை பாராட்டி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி. விஷ்ணு சந்திரன் அவர்களுக்கு தங்கப் பதக்கமும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் அவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா அவர்களுக்கு வெண்கலப் பதக்கமும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதான், சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, விழுப்புரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி தடுப்பூசி திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர். ககன்தீப் சிங் பேடி, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர் ஆர். சேஷசாயி, செயல் துணைத் தலைவர் டாக்டர் இ.ஹேமந்த் ராஜ் இயக்குநர் டாக்டர் கல்பனா பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அரசுத் திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைவதை உறுதி செய்திட முதலமைச்சர் அவர்கள் 'நீங்கள்_நலமா' திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த முன்னெடுப்பின் கீழ், அரசுத்திட்டப் பயனாளிகளின் கருத்துகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

# மலேசியாவில் 'பெருந்தமிழ் விருது' பெற்றார் கவிப்பேரரசு வைரமுத்து!

கோலாலம்பூர், மார்ச் 11 -

'மகாகவிதை' நூலுக்காக மலேசிய தமிழ் இலக்கிய காப்பகமும் தமிழ் பேராயமும் இணைந்து கவிப் பேரரசு வைரமுத்துவிற்கு விருது மற்றும் 1 லட்சம் ரிங்கிட் வழங்கின

கவிப்பேரரசு வைரமுத்து சமீபத்தில் எழுதிய 'மகாகவிதை' நூல் தமிழகம் மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளில் பெரும் பாராட்டு பெற்றதை தொடர்ந்து கடல் தாண்டியும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

மலேசிய தமிழ் இலக்கிய காப்பகமும் தமிழ் பேராயமும் இணைந்து கவிப்பேரரசு வைரமுத்துவின் சாதனை படைப்பான 'மகாகவிதை' நூலுக்கு 'பெருந்தமிழ் விருதை' மலேசியாவில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் வழங்கின.

தான்ஸ்ரீ டாக்டர் எஸ் .ஏ. விக்னேஸ்வரன் தலைமையில் டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் முன்னிலையில் கோலாலம்பூரில் 8.3.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது மற்றும் 1 லட்சம் ரிங்கிட் கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு வழங்கப்பட்டது. பஞ்சபூதங்களைப் பற்றி விரிவாக பேசும் 'மகாகவிதை' நூலை படித்து மகிழ்ந்த ஐந்து நிபுணர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நீர் குறித்து இஸ்லாமிய கல்விக் குழுத் தலைவர் டத்தோ ஸ்ரீ இஃபாலும், காற்று குறித்து மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை பேராசிரியர் முனைவர் இராஜேந்திரனும், தீ குறித்து சுலுத்தான் இதுரீசு கல்வியல் பல்கலைக்கழகம் தலைவர், மலேசியத் தமிழ்ப் புலவர் சங்கத்தைச் சேர்ந்த முனைவர் மனோன்மணதேவி அண்ணாமலையும், பூமி பற்றி மேனாள் காவல் துறை ஆணையர் புலவனின் புவி காக்கும்

வேட்கை மதிப்புமிகு டத்தோ ஸ்ரீ தெய்வீகன் ஆறுமுகமும், ஆகாயம் குறித்து மலேசியத் தமிழ்நெறிக் கழகம் தேசியத் தலைவர் தமிழ்ப்பெருந்தகை இரா திருமாவளவனும் விரிவாக பேசி கவிப்பேரரசு வைரமுத்துவின் படைப்பை வெகுவாக பாராட்டினர்.

விருதினைப் பெற்றுக் கொண்டு பேசிய கவிப்பேரரசு வைரமுத்து, மலேசிய தமிழ் இலக்கிய காப்பகம் மற்றும் தமிழ் பேராயத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் பங்கேற்ற அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்காக சமீபத்தில் மலேசியா வந்தடைந்த கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு 'டத்தோ' ஸ்ரீ எம் சரவணன் தலைமையில் விமான நிலையம் முதல் தங்கி இருக்கும் ஹோட்டல் வரை சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




மலேசியாவில் நடைபெற்ற விழாவில் மகாகவிதை நூலுக்காக மலேசிய தமிழ் இலக்கியக் காப்பகமும், தமிழ் பேராயமும் இணைந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு 'பெருந்தமிழ் விருது' வழங்கின.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ. தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன்.கோதண்டராமன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், ப.மருதநாயகம், மரு.முனைவர் இராகலைக்கோவன், எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.என்.ஜோ. டி.குருஸ், சி.கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம.இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஒளவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரபிக்கடலில் படகில் சென்று தவறி விழுந்து காணாமல் போன

# குளச்சல் முஹைதீன்யாசர் அலி குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 11-

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் கொச்சி துறைமுக கடலோர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரபிக்கடலில் படகில் சென்று தவறி விழுந்து காணாமல் போனவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் "அ" கிராமம், காமராஜ் சாலையைச் சேர்ந்த திரு. முஹைதீன் யாசர் அலி (வயது 32) த/பெ.இப்ராஹீம் என்பவர் கடந்த 08.01.2024 அன்று கேரள மாநிலம், எர்ணாகுளம் மாவட்டம், கொச்சி துறைமுக கடலோர காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அரபிக் கடலில் 163 கி.மீ. வடமேற்கு திசையில் ஆழ் கடலில் படகில் மீன்பிடிக்கச் சென்றவர்களில் சமையல் பணிக்காகச் சென்றபோது எதிர்பாராதவிதமாக படகிலிருந்து கடலுக்குள் தவறி விழுந்துள்ளார். அவரை மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், இது வரை கண்டுபிடிக்க இயலாமல் காணாமல் போயுள்ளார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

கடலில் தவறி விழுந்து காணாமல் போயுள்ள முஹைதீன் யாசர் அலி அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## 40 தொகுதிகளிலும் - எங்கள் கூட்டணி வெற்றி பெறும்!

# ஒன்றாகப் போராடி ஒன்றாக வெற்றி பெறுவோம்!

## தொகுதிப் பங்கீட்டுக்குப் பின். காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் பேட்டி



சென்னை மார்ச் 11 -

திமுக கூட்டணியில் 10 மக்களவை தொகுதிகள் காங். கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிலையில், தேர்தலில் ஒன்றாக போராடி, ஒன்றாக வெற்றி பெறுவோம் என்று காங். பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் நெருகியுள்ள நிலையில், நாடு முழுவதும் அனைத்து கட்சிகளும் கூட்டணி பேச்சு வார்த்தை மற்றும் தொகுதி பங்கீடை இறுதி செய்யும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளன. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை திமுக தீவிரமாக மேற்கொண்டு வந்தது.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியுடன் இரண்டாம் கட்டமாக தி.மு.க. சென்னை அண்ணா அறிவாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் திமுக சார்பில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், தி.மு.க. தேர்தல் குழு தலைவர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் பொன்முடி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திருச்சி சிவா எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், முன்னாள் மத்திய அமைச்சர் முகுல் வாஸ்னிக், காங். மேலிட பொறுப்பாளர் அஜோய் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் காங். கட்சிக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. தமிழ்நாட்டில் 9 தொகுதிகளிலும், புதுச்சேரி தொகுதியிலும் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பேசிய காங். பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால், "மக்களவை தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் திமுக உடன் கூட்டணி அமைத்து காங்கிரஸ் போட்டியிடுகிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சி. தி.மு.க. கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும், அதன் வேட்பாளர்களுக்கும் காங்கிரஸ் முழு ஆதரவு வழங்கும். இந்த முறை 40 தொகுதிகளிலும் எங்களின் கூட்டணி வெற்றி பெறும். திமுக - காங். உறவு எப்போதும் பிரியாது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஒன்றாக போராடுவோம், நாங்கள் ஒன்றாக வெற்றி பெறுவோம்" என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியான திகழ்வதாகக் குறிப்பிட்ட கே.சி. வேணுகோபால், இந்த தேர்தலில் பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தியே தீர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## தேர்தலுக்கு சில வாரங்களே உள்ள நிலையில்

# தேர்தல் ஆணையர் பதவியிலிருந்து அருண் கோயல் திடீர் ராஜினாமா!

புதுடெல்லி, மார்ச் 11-

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. தேர்தல் தேதி எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைய அதிகாரிகள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் சென்று அரசியல் கட்சிகள், மற்றும் மாநில அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வந்தனர்.

மார்ச் 2வது வாரத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடு முழுவதும் தேர்தல் விறுவிறுப்பு உள்ள நிலையில், தேர்தல் ஆணையர் பொறுப்பில் இருந்து அருண் கோயல் இன்று திடீரென்று ராஜினாமா செய்துள்ளார். ஏற்கனவே ஒரு தேர்தல் ஆணையர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தற்போது அருண் கோயலும் ராஜினாமா செய்துள்ளார்.

இதனால், தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் மட்டுமே உள்ளார். தேர்தல் ஆணையராக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அருண் கோயல் நியமிக்கப்பட்டார். அருண் கோயல் கடந்த கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் 21ல் பொறுப்பேற்றார். இவரது பதவிக்காலம் வரும் 2027 ஆம் ஆண்டு வரை உள்ள நிலையில், நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து விலகி யுள்ளார்.

அருண் கோயல் பதவியேற்கும் போதே விமர்ச னங்கள் எழுந்திருந்தன.

அதாவது, அருண் கோயல் 1985 பஞ்சாப் கேடர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆவார். இவர் மத்திய கனரக தொழிற்சாலை அமைச்சகத்தின் செயலாளராக பதவி வகித்து வந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 31-ஆம் தேதியுடன் ஓய்வு பெற இருந்த அருண் கோயல் 6 வாரங்களுக்கு முன்பாக ஓய்வுபெறுவதாக கூறி தன்னுடைய வி.ஆர்.எஸ். கடிதத்தை வழங்கினார்.

விருப்ப ஓய்வு பெற்ற மூன்றே நாளில் அருண் கோயலுக்கு தேர்தல் ஆணையாளராக பதவி வழங்கியிருப்பது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், தான் தற்போது தேர்தல் ஆணையர் பொறுப்பில் இருந்து அருண் கோயல் விலகியுள்ளார்.



தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழக அரசின் மகளிர் உரிமைத் தொகை வழங்குவதால் ஏற்படும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறும்பட தயாரிப்பாளர் ப.எழில் மறவனுடன் இணைந்து காரிமங்கலத்தில் வெளியிட்டார். உடன் தர்மபுரி தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி பழனியப்பன், கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் ஏ.கே.தருண், முன்னாள் எம்.பி.கள் தாமரைச்செல்வன், எம்.ஜி.சேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர். ஆ.மணி, ரேணுகாதேவி, ஒன்றியச் செயலாளர்கள் பி.எஸ்.சரவணன்.முத்துக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தமிழழகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைக்க தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் விழா நடைபெற உள்ள தருமபுரி அரசுகலை கல்லூரி வளாகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.கி.சாந்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டிபன் ஜேசுபாதம், கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, நகர செயலாளர் நாட்டான் மாது, நகர்மன்ற தலைவர் திருமதி.லட்சுமி மாது, மக்கள் தொடர்பு அலுவலர் மோகன், மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக 08.03.2024 அன்று தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் அறந்தாங்கி திட்டப் பகுதிகளில், ரூ.40.13 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 384 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, பொன்னமராவதி திட்டப் பகுதி, காட்டுப்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் கலந்துகொண்டு, பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் தயாரிக்கப்பட்ட

# கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 11 –**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் தயாரிக்கப்பட்ட கலைஞர் தமிழ் குறித்து 100 நூல்களை – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் திருவையாறு தமிழ்ஐயா வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்ட கலைஞர் தமிழ் குறித்து 100 நூல்களை வெளியிட்டார்.

2022 ஜனவரியில் கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கைத் தொடக்கப்பட்டு, பிப்ரவரியில் 100 தமிழ் ஆய்வாளர்கள்/ படைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 2023 அக்டோபர் 1 அன்று மும்பையில் கலைஞர் தமிழ் ஆய்வாளர்கள் பங்கேற்ற 'கலைஞர் தமிழ் ஆய்வு மாநாடு' நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் கலைஞர் -100 நூல் ஆவணங்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டுக் குழுத் தலைவராக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செயல்பட்டு, 'கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை' தலைவராக முனைவர் மு.கலைவேந்தன் அவர்களும், கவிஞர் சண்.அருள்பிரகாசம் அவர்களும் தமிழ் ஆய்வாளர்களுடன் இணைந்து கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள் தயாரிக்கப்பட்டு, திருவையாறு தமிழ் ஐயா வெளியீட்டகத்தால் பிரசுரிக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள் மற்றும் அதன் அந்நூல்களின் ஆசிரியர்கள் விவரங்கள் வருமாறு:

1. கலைஞரின் தமிழ்வழிக் கல்விக் கனவு - மருத்துவர் சு.நரேந்திரன்
2. KALAIGNAR'S WORLD OF LITERATURE - Dr. B. ILANGO
3. கலைஞர் கண்ட அய்யனும் அடிகளும் - மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி
4. கலைஞரும் வள்ளுவரும் - முனைவர் வி.ஜி.சந்தோசம்
5. கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன் - முனைவர் சரசுவதி இராமநாதன்
6. கலைஞரின் படைப்புலகில் பெண்ணியம் - முனைவர் உலக நாயகி பழனி
7. கலைஞர் படைப்புலகம் - கவிஞர் சண்.அருள்பிரகாசம்
8. ஐந்தமிழ் அறிஞர் கலைஞர் - முனைவர் சண்முக.செல்வகணபதி
9. வரலாற்றில் கலைஞர் கேள்விகள் ஆயிரம் - முனைவர் மு.கலைவேந்தன்
10. கலைஞரே ஒரு கவிதைதான் - பாவலர் நொச்சிப்பூந்தளிரன்
11. கலைஞரின் மேடைத்தமிழ் - முனைவர் பா.வேலம்மாள்
12. கலைஞர் பிள்ளைத்தமிழ் - புலவர் பூவை. சு.செயராமன்
13. கலைஞரும் வீறுகவியரசரும் - பாரி முடியரசன்
14. கலைஞரின் திருக்குறள் வெளிப்பாட்டுத்திறன் - முனைவர் கலைமகள் சிவஞானம்
15. கலைஞர் செம்மொழி தமிழும் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் - முனைவர் இரா.இராசாமணி
16. கலையும் கலைஞரும் - முனைவர் அருட்செல்வி கிருபை ராசா
17. கலைஞர் சிறுகதைகளில் புரட்சி - புலவர் ப.கனகரத்தினம்
18. கலைஞரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உவமைகள்- முனைவர் இளமதி சானகிராமன்
19. உடன்பிறப்பே - முனைவர் ம.மணிமேகலை
20. கலைஞரின் சாதனைகள் 100 - முனைவர் கவிதை கணேசன்
21. கலைஞரின் திரைத்தமிழ்தேன் - கவிஞர் ஆவராணி ஆனந்தன்
22. நாட்டுப்புறப்பாடல்களில் கலைஞர் புகழ் பாடல்கள் நூறு - வளப்பக்குடி கவிஞர் வீரசங்கர்
23. கலைஞரின் திருக்குறள் உரை நெறி - முனைவர் கி.சிவகுமார்
24. கலைஞரின் இளமைப்பருவமும் வாழ்வியல் மொழிகளும் - டாக்டர் வா.செ.செல்வம்
25. கலைஞரின் நகைச்சுவை - மருத்துவர் ந.சூனியர் சுந்தரேஷ்
26. கலைஞரும் தொல்காப்பியரும் - முனைவர் வெ.அ.நாகரெத்தினம்
27. கலைஞர் ஒரு காலக்கண்ணாடி - முனைவர் பி.கணேஷ்
28. கலைஞரின் தேனலைகள் - முனைவர் பி.ரகமத் பீபி
29. கவிதை வரலாற்றில் கலைஞர் - முனைவர் இரா.தண்டபாணி
30. கலைஞரின் இலக்கியக் கொடை - முனைவர் ச.முருகேசன்
31. கலைஞரின் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள் - முனைவர் க.அழகர்
32. கலைஞரின் புதினங்களில் காரிகையர் - பேரா. கு.ஜெயசித்ரா
33. கலைஞரின் அனல்பறக்கும் வசனங்கள் - சரசுவதி அரிகிருஷ்ணன்
34. கலைஞர் குறளோவியத்தின் எழிலோவியங்கள் - முனைவர் பூ.லலிதபாலா
35. தொல்காப்பியப்பூங்காவில் கலைஞரின் கவின்மணம் - கவிஞர் ச.குமரவேல்
36. கலைஞரின் நெஞ்சுக்குநீதியில் தேதியும் சேதியும் - க.கண்ணகி
37. குறளோவியத்தில் கலைஞரின் ஆளுமையும் பன்முக ஆற்றலும் - வழக்கறிஞர் க.கணேசன்
38. வரலாற்று நோக்கில் கலைஞரின் பொன்னர் சங்கர் - கோ.பிரவினா சேகர்
39. கலைஞரின் திரைப்பயணம் - கவிஞர் தமிழ்க்கனல்
40. கலைஞரின் கவிதைகளில் பகுத்தறிவும் பண்பாடும் - பாவரசு முகவை திருநாதன்
41. கலைஞரின் பன்முக ஆளுமை - முனைவர் சங்கீதா சரவணன்
42. கலைஞரின் பயண அனுபவங்கள் - முனைவர் சு.சுஜாதா
43. கலைஞரின் திரை இசை அமுது - முனைவர் தி.வ.சந்திரிகா
44. கலைஞர் அந்தாதி - பாவரசு வதிலை பிரதாபன்
45. கலைஞர் கவிதைகளில் இலக்கியச் செல்வாக்கு - முனைவர் மு.லோக நாயகி
46. கலைஞரின் சட்டமன்றச் சொற்பொழிவுகள் - முனைவர் சு.பாரதிராணி
47. போற்றதும் போற்றதும் கலைஞரை போற்றதும் - முனைவர் கே.ராதா
48. பேராசிரியரின் பார்வையில் கலைஞர் - முனைவர் தெ.வாசுகி
49. கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா - முனைவர் இரா.கோடீஸ்வரி
50. கலைஞரின் ஆட்சியில் கணினித்தமிழ் - முனைவர் இரா.இந்து
51. கலைஞரின் சிறுகதைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள் - முனைவர் ச.பொன்ஜெயந்தி
52. கலைஞரின் சிறுகதைகளில் தொன்மம் - முனைவர் வெ.இராணி
53. கலைஞரும் முடியரசரும் - முனைவர் ப.சு.செல்வமீனா
54. கலைஞரின் முரசொலியில் கொள்கை முழக்கங்கள் - முனைவர் வெ.அமுதா
55. கலைஞரின் மொழிப்பற்றும் இனப்பற்றும் - முனைவர் சு.உமாதேவி
56. நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கலைஞரின் நினைவுகள் - முனைவர் சித்ரா ஆசைத்தம்பி
57. கலைஞரின் பொன்மொழிகள் - முனைவர் இரா.நாகேஸ்வரி
58. கலைஞரின் திரைப்படங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் - முனைவர் அ.ஜெயராஜ்
59. கலைஞர் ஒரு புரட்சியாளர் - முனைவர் பொ.திராவிட பிரேமா
60. கலைஞரின் கடிதங்களில் இலக்கிய மேற்கோள்கள் - முனைவர் தி.இராதா
61. கலைஞரின் நாடகங்களில் தமிழும் தமிழ்மக்களும் - ம.ஜெகதீசுவரி
62. கலைஞர் ஒரு பல்கலைக்கழகம் - பேரா. மு.நளா
63. கலங்கரை விளக்கமாய் கலைஞரின் பொன்மொழிகள் - முனைவர் அ.மரியசெசிலி
64. ஆய்வுநோக்கில் கலைஞரின் ரோமாபுரி பாண்டியன் - முனைவர் ப.செ.முத்துலெட்சுமி
65. இளைஞர்களுக்கு கலைஞரின் ஆத்திசூடி - கவிஞர் க.முகில்வேந்தன்
66. கலைஞரின் காலக்குறிப்புகள் (வினா-விடை) - ந.நல்லய்யன்
67. கலைஞரின் கதைகளில் மனிதநேயம் - முனைவர் ம.ஆனந்தவள்ளி
68. அறிஞர் அண்ணா வழியில் கலைஞர்- பேரா. கோ.இராஜலெட்சுமி
69. கலைஞரின் புதினங்களில் பண்பாட்டுச் சிந்தனைகள் - பேரா. வெ.சுமதி
70. கலைஞரின் வரலாற்று உணர்வுகள் - முனைவர் ஷீலா சீனிவாசன்
71. கலைஞர் நாடகங்களில் தமிழ்ப் பண்பாடு - முனைவர் க.புஷ்பலதா
72. கலைஞரின் குறளோவியம் பன்முகப் பார்வை - முனைவர் நயம்பு.அறிவுடை நம்பி
73. கலைஞரின் சங்கத்தமிழ் மரபும், மாண்பும் - முனைவர் ச.பிரியா
74. கலைஞரின் முத்தமிழ்க் கலைப் பணிகள் - கவிஞர் ப.கதிர்பாரதி
75. கலைஞரின் படைப்பாளுமைத் திறன் - முனைவர் மு.கவிதா
76. கலைஞரின் திருக்குறள் உரைத் திறன் - முனைவர் கோ.கிருட்டிண மூர்த்தி
77. தொல்காப்பியம் சூடிகொடுத்த கலைஞர் - முனைவர் தாமரை
78. கலைஞரின் சிறுகதைகளில் பண்பாடு - முனைவர் மா.பாப்பா
79. கலைஞரின் சிலப்பதிகார நாடகக் காப்பியம் - முனைவர் செ.கற்பகம்
80. கலைஞர் கடிதங்களில் நடையும் கொடையும் - முனைவர் இரா.சிவ குமார்
81. கலைஞரின் நாடகங்களில் இலக்கிய ஆளுமை - முனைவர் சீ. மகேஸ்வரி
82. கலைஞரின் விழுமிய கதை மாந்தர்கள் - முனைவர் த.கண்ணகி
83. கலைஞரின் கடிதங்களில் மொழிவளம்- முனைவர் சே.தெய்வக்கன்னி
84. கலைஞரின் கவிதைக்கலை - முனைவர் சு.சொர்ணரேகா
85. கலைஞரும் இராமானுஜரும்- முனைவர் கே.எஸ். பிரணார்த்திகரன்
86. கலைஞரும் இளங்கோவடிகளும் - முனைவர் யு.ஜெயபாரதி
87. கலைஞரின் வரலாற்று நாவல்கள் - பேரா. மு.புஷ்பா
88. கலைஞரின் வரலாற்று நோக்கில் தென்பாண்டிச் சிங்கம் - முனைவர் பா.சுமத்திரா
89. கலைஞரின் நெஞ்சுக்குநீதியில் காலமும் கருத்தும் - கவிஞர் க.முகில்வேந்தன்
90. நெஞ்சுக்கு நீதியில் கலைஞரின் அனுபவங்கள் - முனைவர் த.உமா ராணி
91. கலைஞரின் கடிதங்களில் இலக்கிய ஆளுமை - முனைவர் சுகன்யா சுரேஷ்குமார்
92. A RHETORICAL STUDY OF KALAIGNAR'S SANKATH TAMIZH - Dr. R. ELAVARASU
93. கலைஞர் உலா - வாழ்த்துப்பாமாலை - பாவலரேறு ச.பாலசுந்தரனார்
94. கவிச்சூரியன் கலைஞர் - கவிஞர் சொற்கோ கருணாநிதி
95. கலைஞரின் கவித்துவமும் கலைப் பணிகளும் - முனைவர் த.ஜான்சி ராணி
96. கல்வி மேம்பாட்டில் கலைஞர் - முனைவர் கே.ஆர்.கமலா முருகன்
97. கலைஞரும் கவின்மிகு தமிழும் - முனைவர் சு.பாஸ்கர்
98. கலைஞர் ஓர் இதழாசிரியர் - முனைவர் க.பேபி
99. கலைஞர் படைப்புகளில் மனித உரிமைச் சிந்தனைகள் - முனைவர் சி.கண்மணி
100. கலைஞர் பேனா பேசுகிறது - விஜயலெட்சுமி நரேந்திரன்

இந்த 100 நூல்களைப் படைத்தவர்களில் 62 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் வெளியிட்டு நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், திராவிட இயக்க எழுத்தாளர் கவிஞர் சண். அருள்பிரகாசம், திருவையாறு, ஔவைக் கோட்டம் நிறுவனத் தலைவர் முனைவர் மு. கலைவேந்தன், எழுத்தாளர் இமயம் மற்றும் நூலாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திட்டப் பணிகள்! முதல்வர் திறந்து வைத்தார்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் 69 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி 15, பணிமனை 196 - கண்ணகி நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்களை மாற்றியமைத்தல் மற்றும் 38 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல் மற்றும் ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் பிளம்பிங் ஏற்பாடுகளுடன் HDPE தொட்டிகள் அமைக்கும் பணி;

என மொத்தம் 195 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

வேலூர் மண்டலம், திருவத்திபுரம் நகராட்சியில் 4 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், திண்டிவனம் நகராட்சியில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம்;

திருநெல்வேலி மண்டலம், களக்காடு நகராட்சியில் 4 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தினசரி சந்தை, பத்மனாபபுரம் நகராட்சியில் 6 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம்

என மொத்தம் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நுங்கம்பாக்கம் பைகிராப்ட்ஸ் கார்டன் சாலைக்கு மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறந்து வைத்தல்**

சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையை நிறுவிய டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்களின் 84-வது பிறந்தநாளையொட்டியும், அவரது மருத்துவ சேவைக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் வகையிலும் நுங்கம்பாக்கம், ஹாடோஸ் சாலை (Haddows Road) முதல் வாலேஸ் கார்டன் (Wallace Garden) 2-வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீட்டர் நீளத்தில் உள்ள பைகிராப்ட்ஸ் கார்டன் சாலைக்கு மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ.சரவணன், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இன்னும் 500 ஆண்டுகளுக்குப் பிறகும்

# 'மகா கவிதை' பேசப்படும் ஒரு படைப்பாகத் திகழும்!

## மலேசியாவில் "பெருந்தமிழ் விருது" பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதம்!

கோலாலம்பூர், மார்ச் 11–

"இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகும் 'மகா கவிதை' பேசப்படும் ஒரு படைப்பாகத் திகழும்" என்று கவிப்பேரரசு வைரமுத்து மலேசியாவில் 'பெருந்தமிழ் விருது' வழங்கும் விழாவில் பேசும்போது பெருமிதம் பொங்கக் கூறினார்.

கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய மகா கவிதை நூலை இந்த ஆண்டு ஜனவரி முதல் நாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார். வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் தமிழ் உலகமெங்கும் அந்த நூல் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. நிலம் – நீர் – தீ – வளி – வெளி என்னும் ஐம் பூதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட படைப்புதான் மகா கவிதை.

மகா கவிதைக்கு மலேசியத் தமிழ் இலக்கியக் காப்பகமும் - தமிழ்ப்பேராயமும் இணைந்து பெருந்தமிழ் விருது வழங்கி இருக்கின்றன. கோலாலம்பூரில் 8ஆம் தேதி நடைபெற்ற பிரம்மாண்டமான விழாவில் பெருந்தமிழ் விருதாக கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு 1லட்சம் மலேசிய வெள்ளி வழங்கப்பட்டது. இது இந்திய மதிப்பில் ரூபாய் 18லட்சம் ஆகும். நினைவுப் பரிசாக மகா கவிதை அட்டைப்படத்தின் பளிங்குச் சிலையும் வழங்கப்பட்டது.

மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் தலைவர் டான்ஸ்ரீ விக்னேஸ்வரனும், தேசியத் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ சரவணனும் இந்த விருதை இணைந்து வழங்கினார்கள். ஐம்பூதங்கள் பற்றிய கலைநிகழ்ச்சி காணொலியோடு மேடையில் அரங்கேற்றப்பட்டது.

நிலம் - நீர் - தீ - வளி - வெளி எனும் ஐந்து தலைப்புகளில் மலேசியத் தமிழ் அறிஞர்களான டத்தோஸ்ரீ முஹம்மது இக்பால், பேரா. ராஜேந்திரன், முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை, டத்தோஸ்ரீ தெய்வீகன் ஆறுமுகம், இரா.திருமாவளவன் ஆகிய ஐவரும் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

'14 வயது முதல் என் வாழ்க்கையைச் செதுக்கியதில் கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைகளுக்குப் பெரும்பங்கு இருக்கிறது' என்றார் டத்தோஸ்ரீ சரவணன்.

'கவிப்பேரரசு வைரமுத்துவுக்குச் செய்யும் பெருமை தமிழுக்கு மலேசியா சூட்டும் கிரீடமாகும்' என்றார் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன்.

நிறைவாக ஏற்புரை ஆற்றினார் கவிப்பேரரசு வைரமுத்து:

'மகா கவிதைக்கு வழங்கப்பட்ட இந்தப் பெருந்தமிழ் விருது உலகத் தமிழ்ப் படைபபாளிகளுக்கெல்லாம் ஊட்டமாகவும் ஊக்கமாகவும் விளங்குகிறது. அறிவியல் வேறு; இலக்கியம் வேறு. இந்த இரண்டையும் கலந்து கலை செய்கிறபோது அறிவுலகம் ஏற்குமா...? என்ற ஐயப்பாடு எனக்கிருந்தது. இந்த விருதின் மூலம் அந்த ஐயப்பாடு அழிந்தது. தமிழில் காதல் - வீரம் - சமயம் - தத்துவம் - காவியம் - காப்பியம் - அறம் என்று எல்லாப் பொருள்களும் இருக்கின்றன. தமிழில் எது இல்லை என்று எனக்குள்ளே எழுந்த நெடுங் கேள்விக்கு நான் படைத்திருக்கும் பதில்தான் மகா கவிதை. தமிழின் நெடுங்கணக்கில் அறிவியல் இல்லை; அறிவியல் இல்லாமல் இந்த உலகுக்கு இனி இயக்கம் இல்லை. தமிழர்களின் புதிய தலைமுறையை இலக்கிய அறிவியலோடு இணைக்கும் முயற்சிதான் இந்த மகா கவிதை. அதைப் புரிந்துகொண்ட மலேசியத் தமிழ்மக்களுக்கு என் வணக்கமும் நன்றியும்.

இன்னும் 500ஆண்டுகளுக்குப் பிறகும் பேசப்படும் ஒரு படைப்பாக மகா கவிதை திகழக்கூடும். தமிழர்கள் இதுகுறித்து உரையாட வேண்டும். தமிழ்ப் பிள்ளைகளை அறிவுத் தலைமுறையாகவும் - அறிவியல் தலைமுறையாகவும் வளர்த்தெடுக்க வேண்டும்'.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து பேசினார்.


# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் திருமதி. ஏ.சோபியா, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டுவந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்டஅனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 09.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



# ஆளுநர் இரவியின் பேதைமையும் அறிஞர்களின் மேதைமையும்!

பேதைமையைக் குறித்து ஓர் அதிகாரமே பாடியிருக்கிறார் வள்ளுவர். பேதைமை என்றால் அறியாமைத் தன்மை. அதை வெளிப்படுத்த நாணப்படவேண்டும். அறிஞர் அளந்து பேசுவர், அழகுறப் பேசுவர், பதியப்பேசுவர், சிந்தனைக் கிளர்ச்சியுறப் பேசுவர், சிந்தித்துப் பேசுவர், நாம் சிந்திக்கப் பேசுவர்.

தமிழ்நாட்டிற்கு இரவி என்பவர் ஒருவர் ஆளுநராக வந்து இருக்கிறார். மேனாள் காவல்துறை அதிகாரி. அரசியல் 'பரமபதத்தில்' ஆளுநராக ஆகிவிட்டார். என்றுமுள தென் தமிழ்நாட்டிற்கு அவர் வந்தது முதல் அவரது எந்த நடவடிக்கைகளும் போற்றும் படியாக இல்லை.

அவருக்குச் சட்ட ஞானம் இல்லை, சட்டமன்ற மரபு தெரியவில்லை, ஜனநாயகம் தெரியவில்லை, எதுவும் புரியவில்லை என்று நாம் சொல்ல வரவில்லை.

ஆளுநர் இரவிக்கு எல்லாம் தெரியும், அவர் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. சங் பரிவாரத்தைச் சேர்ந்தவர். எதிரிகளிடம் அவர்களின் பரப்புரை உத்தி, 'இருப்பதை இல்லாதது ஆக்குவது, இல்லாததை இருப்பதாகக் காட்டுவது' - என்பது தான்!

உண்மையை உரைக்கவும் மெய்ப்பிக்கவும் தெரியாதவர்கள் இல்லை அவர்கள், 'உண்மையைச் சொல்லவா? உண்மையை இல்லை என்று சொல்லவா?' என்பதை குருஜிகளிடம் பேசிக் காட்டி 'ஷொட்டு' பெற்று விசித்திரமான - 'விளையாது விளையும் கழனிகளை' உருவாக்கப் பயிற்சி பெற்றவர்கள்.

அப்படிப் பயிற்சி பெற்ற நம் தமிழ்நாட்டு ஆளுநர் இரவி, அய்யா வைகுண்டருடைய 192-ஆவது பிறந்த நாள் விழாவிலே சில (கருத்துகளைக்) பொய்களைக் கூறியிருக்கிறார். அவை நாளேடுகளில் வெளியாகி இருக்கின்றன. அவர் என்ன பேசினார் என்று பார்ப்போம்.

(1) "…. புனித சநாதன மண்ணில் அய்யா வைகுண்டரும் வள்ளலாரும் அச்சுறுத்தப் பட்டார்கள்"

(2) "இராபர்ட் கால்டுவெல்லும் ஜி.யு.போப்பும் பள்ளிப் படிப்பில் வெற்றி அடையாமல் இடைநிற்றல் செய்துவிட்டவர்கள். அவர்கள் சமயப் பரப்புரைப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்கள்"

(3) "அப்படிப்பட்ட கால்டுவெல்தான் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிகளின் குடும்பம்' எனும் நூலை எழுதியிருக்கிறார்."

(4) "இவர்கள் வந்த பிறகு இங்குள்ள பள்ளிகள் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவ மெஷினரி பள்ளிகள் தொடங்கப்பட்டன."

(5) "இவர்களைக் கொண்டு பிரிட்டிஷ் பேரரசு சநாதன தர்மத்தை அழித்தது"

(6) "மதம் மாறுதலுக்கு எதிராக இலட்சுமி நரசு செட்டி 90,000 பேர் கையெழுத்திட்ட மனு ஒன்றினைத் தயாரித்து கோரிக்கையாக பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிகழ்வு 11.11.1839 இல் நடந்தது"

மேலே ஆளுநர் பேசியதன் சாரமாக ஆறு புள்ளிகளைத் தந்துள்ளோம். அவர் பேச்சு ஒரு பொருளையொட்டியதாக; தொடர்ச்சி உள்ளதாக ஏடுகளில் காணப்படவில்லை. இருப்பி னும், நாம் எடுத்துக் காட்டியுள்ள அவரின் (கருத்துகளுக்கு) பொய்யுரைகளுக்கு மறுப்புரைக்க விரும்புகின்றோம்.

(1)அய்யா வைகுண்டரும் வள்ளலாரும் சநாதனக் கருத்து களை, கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் இல்லை, இவர்கள் புதிய அமைப்பை உருவாக்கி அதன்வழி அனைத்து மக்களுக்கும் 'சமநிலையை' வற்புறுத்தியவர்கள். அய்யா வைகுண்டரைப் பற்றி பேரவைத் தலைவர் அப்பாவு அவர்களும் பாலபிரஜாபதி அடிகளாரும் விளக்க அறிக்கையை நாளேடுகளில் வழங்கி இருக்கிறார்கள். வள்ளலார் "மதித்த சமய வழக்கெல்லாம் மாய்ந்தது, வருணாசிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது" என்று பாடியவர். சநாதன வருணாசிரமக் கருத்து களுக்கு இவ்விரு பெரியவர்களும் எதிரானவர்கள். அது குறித்து ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்க சநாதன ஆதரவாளர்கள் என்று கருதி இவர்களுக்கு யார் அச்சுறுத்தல்களைத் தெரிவித்தனர்? இதைப் பற்றி ஆளுநர் குறிப்பிட்டு இருப்பது பொய்யுரையாகும். வேண்டுமென்றே பேசியது ஆகும்.

(2) இராபர்ட் கால்டுவெல்லும், ஜி.யு. போப் (ஜியார்ஜ் யுக்லோ போப் - George Uglow Pope) பள்ளிக்கல்வியை முழுமையாகப் படிக்கவில்லை. இடைநிற்றல் செய்துவிட்டவர்கள். இவர்களைத் தான் சமயப் பரப்புநர் பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்று ஆளுநர் இரவி கூறி இருக்கிறார்.

இராபர்ட் கால்டுவெல் ஸ்காட்லாந்துக்காரர். அவர் முறையாக கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மொழியியல் படித்தவர். ஆங்கில இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். பன்மொழி அறிஞர். தம்முடைய 20 ஆம் வயதில் பி.ஏ. தேறியவர். முதலாம் மாணவராகத் தேர்வு பெற்றவர். இவரது ஆய்வுகள், பணிகள் பற்றிய நூல்கள் நிரம்ப இருக்கின்றன. அவற்றில் இரண்டு நூல்கள் மிகச் சிறந்தவை ஆகும். இரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய 'கால்டுவெல் அய்யர் சரிதம்,' அடுத்து சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட "The Contribution of European Scholars to Tamil" எனும் நூல். இவ்விரண்டு நூல்களிலும் இராபர்ட்

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்



கால்டுவெல் பற்றியும் ஜி.யு.போப் பற்றியும் விரிவாகக் காணலாம். இவையன்றி இவர்களைப் பற்றிய தனி நூல்கள் ஏராளமாக உள்ளன.

ஜி.யு. போப் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். இவருடைய தமிழ்ப்பணிகள் பற்றியும், சைவச் சித்தாந்தம் பற்றிய ஆய்வைக் குறித்தும் "The Life of J.N.Nallasami pillai" எனும் நூலில் பரக்கக் காணலாம். இந்த இரு அறிஞர்கள் தமிழுக்கு வழங்கிய கொடை இன்னும் நின்று பேசுவன. இரா.பி.சேதுப்பிள்ளையும், ஜே.என். நல்லசாமிப் பிள்ளையும் அவ்விரு பெருமக்களின் ஆய்வுகளில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியதோடு; அவர்கள் வழங்கிய பிற தமிழ்க் கொடைகளை ஏற்றுக் கொண்டார்கள். தமிழுலகம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஆளுநர் இரவி தமிழை அறியாமல் வரலாற்றை சரிவரப் புரிந்து கொள்ளாமல் அவர்களின் கட்சியின் திட்டப்படி பொய் பேசுகிறார்.

டாக்டர் கால்டுவெல்லையும் டாக்டர் ஜி.யு. போப்பையும் 'பள்ளிக் கல்வியைக் கூட முடிக்காமல் இடைநிற்றல் செய்து விட்டு சமயப் பரப்புரைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள்' என்று கீழ்மையும் பேதைமையும் வடிய ஆளுநர் இரவி கூறுவது மன்னிக்கத்தக்கது அல்ல.

(3 கால்டுவெல் மொழியியல் கற்றவர், முறையாகப் பல்கலைக் கழகத்தில் தேறியவர். இலக்கண, இலக்கிய அறிவுடையவர். அவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை - அதுவும் 15 ஆண்டுகள் கடினமாக உழைத்து எழுதிய ஓர் ஆய்வு நூலை ஆளுநர் இரவி ஏகடியம் செய்கிறார் என்றால் அவர்களின் 'பழுத்த' ஆரிய காழ்ப்பின் அடையாளமே தவிர அது வேறு என்ன?

(4) கிறிஸ்துவ மெசினரிகள் வந்து பள்ளிகளைத் தொடங்கினர். மருத்துவம் பார்த்தனர். சாதி பார்க்காமல் கல்வியை அளிக்க ஏற்பாடுகள் நடந்தன. சநாதனிகள் கல்வியை, சமூக நிலையை சமூகமாக வைத்திராதபோது நீங்கள் நடத்திய பள்ளிகள் தானாக அழிந்தன. ஏன்? - திரிமேனிகள் அப்பள்ளிகளில் - கல்லூரிகளில் படித்து உயரவில்லையா? ஆளுநர் இரவி சமஸ்கிருதம் படித்தா ஐ.பி.எஸ். ஆனார்?

(5) பிரிட்டிஷ் பேரரசு சநாதனத்தை எங்கே அழித்தது? சநாதனம், அரசுகள் மாறுகிறபோது புது வேடம் தாங்கிக் கொள்ளுமே. அதுதான் அழிவில்லாதது ஆயிற்றே. அதன் கருத்தாக்கள் புது வியாக்யானங்களை வழங்கி நிலை பெறச் செய்து விடுவார்களே? - அப்படி இருக்கிறபோது சநாதனம் எங்கே அழிந்தது? மிகவேகமாகச் சுழலும் அந்த நால் வேத சக்கரத்தில் அய்ரோப்பிய ஜனநாயகம், அரசியல், கல்வி, ஒரு வெட்டுக் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதற்குத் தான் ஆளுநர் இரவி போன்றவர்கள் கூக்குரல் எழுப்புகிறார்கள். அந்த வெட்டுக் காயம் விரிவுபட பட கூக்குரல் அதிகமாகிறது.

(6) ஆளுநர் இரவி காஜுலு இலட்சுமி நரசு செட்டி (1806-1868) பற்றிப் பேசி இருக்கிறார். அவர் அக்கால கட்டத்தில் சென்னை மாநகரின் பெரும் வணிகராக இருந்தவர். 'இந்து' என்கிற கருத்தியல் பரவாத நேரம் அது. சூத்திர, தாழ்த்தப்பட்ட மக்களின் ஈர்ப்பு கிறிஸ்தவ சமயப் பரப்புரையால் கவர்ச்சிக்கு ஆளாகி இருந்த சமயம் அது. புதுக்கல்வியும் அரசியலும் ஜனநாயகமும் படித்த மக்களிடையே பொதுக் கருத்து உருவாக்கக் கூடிய மன எழுச்சி முகிழ்த்து இருந்த காலம் அது. ஆகவேதான் காஜுலு இலட்சுமி நரசு செட்டி 'சுயசமய' வழிபாட்டுக்கு ஊறு நேருமோ என்கிற ஓர் அச்சத்தைக் கிளப்பி 1839 நவம்பரில் மனு ஒன்றை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். ஆளுநர் இரவி இன்னும் கூறி இருக்க வேண்டிய செய்தியையும் நாம் சொல்ல விரும்புகின்றோம்.

மேலும் அது பொது அமைப்புகள் எதுவும் உருவாக்கப்படாத காலம் ஆகும். 1845 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி சென்னையில் முதன்முதலாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற முதல் பொதுக் கூட்டம் இது. இதை காஜுலு இலட்சுமி நரசு செட்டி கூட்டியிருந்தார். அவர் 'கிரசண்ட்' என்னும் ஆங்கில வார இதழை நடத்தி வந்தார். இவர் பெரு வணிகர், செல்வாக்கு உடையவர் என்பதால் கூட்டத்தைக் கூட்டினார்.

**கூட்டத்தின் நோக்கம் என்ன?**

1845 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றி இருந்தது. அதன்படி கிறிஸ்தவ மதத்தில் ஒரு இந்து சேர்ந்துவிட்டாலும் அவர் சொத்துரிமையை இழக்க வேண்டிய தில்லை என்பதற்கு அச்சட்டம் புதிய வழிமுறையை வகுத்தது. இதனை எதிர்த்துதான் காஜுலு இலட்சுமி நரசு செட்டி கூட்டத்தைக் கூட்டினார். இந்நிகழ்ச்சி கல்கத்தாவை எட்டியது.

இரவீந்திர நாத் தாகூரின் தந்தை தேவேந்திர நாத் தாகூர் 1851 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி காஜுலு இலட்சுமி நரசு செட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர், "கல்கத்தாவில் பிரிட்டிஷ் இந்தியா அசோசியேஷன் எனும் அமைப்பை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். இதே போல ஓர் அமைப்பைச் சென்னையிலும் ஏற்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி 1852 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 ஆம் தேதி கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசிஷன் - சென்னைக் கிளை" எனும் அமைப்பை இலட்சுமி நரசு செட்டி தோற்றுவித்தார். இதற்கு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வமைப்பு கல்கத்தாவின் கிளை அமைப்பாக நீண்ட காலம் செயல்படவில்லை. சென்னை மாகாண அமைப்பாகப் பெயர் மாற்றம் செய்துகொண்டு மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்" எனும் பெயரில் இயங்கியது. அதற்குரிய காரணத்தை கல்கத்தாவுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. "கல்கத்தா அசோசியேஷன், மேட்டுக்குடி மக்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். கடைநிலை, மத்திய தர மக்களின் வருந்தத்தக்க நிலையைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. கூட்டு ஆர்வம் மேற்கொள்ளாத வகையில் பல அம்சங்கள் இருக்கின்றன. ஆகவே கிளை அமைப்பாக செயல்படுவதிலிருந்து நாங்கள் விலகிக் கொள்கிறோம். ஆகவே, 'மெட்ராஸ் நேடிவ் அசோசிஷன்' (சென்னை சுதேசி சங்கம்) என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றோம்" என்று அக்கடிதத்தில் கல்கத்தாவுக்குத் தெரிவித்து விட்டனர். இந்த அமைப்புதான் சென்னை மாகாணத்தின் முதல் அரசியல் அமைப்பாகும்.

ஆளுநர் இரவி, இலட்சுமி நரசு செட்டியின் முதல் மனுவைப் பற்றிதான் குறிப்பிட்டு இருக்கிறார். அவர் மதம் மாறுதலுக்கு மட்டும் குரல் கொடுத்தவர் இல்லை - என்பதை இரவி புரிந்து கொள்ள வேண்டும். அவர் 1855- இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு தனது 4-ஆவது மனுவையும் அனுப்பி வைத்தார். அதில்; கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியை அகற்றி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடி ஆட்சியைக் கோரி இருந்தது. அவரின் முழுப் பரிமாணம் கிடைக்கவில்லை. வாழ்நிலையைப் பொறுத்துதான் உரிமைக் குரல் எழும்.

1868-இல் இலட்சுமி நரசு செட்டி மரணத்திற்குப் பிறகு இவ்வமைப்பு இயங்கவில்லை, பின்னர் சில ஆண்டுகள் கழித்து இயங்கத் தொடங்கியது. பிறகு இதனையொட்டி 'சென்னை மகாஜன சபை' உருவாயிற்று, இவ்வமைப்பின் கட்டடங்கள் இன்னமும் சென்னை அண்ணா சாலையில் இருக்கின்றன. இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்பு இந்த அமைப்புதான் இயங்கி வந்தது.

ஆளுநர் இரவியின் அய்யா வைகுண்டர் விழாப் பேச்சு அவரின் முழு அறியாமையை வெளிப்படுத்திவிட்டது. என்ன தான் அது அவர்களது இயக்கத்தின்-கட்சியின் உத்தி என்றா லும் ஆளுநரின் அறிவின் சூன்யத்தையே அது காட்டி விட்டது, அய்யா வைகுண்டர், வள்ளலார், இராபர்ட் கால்டு வெல், ஜி.யு.போப் போன்ற பெருமக்களின் மேதைமையை ஆளுநர் இரவியின் பேச்சு சூரியனைக் கொண்டு மறைப்பதாகும். ஆனால் ஆளுநர் இரவியின் பேதைமை 'பளிச்சென' அறிவுலகத்திற்குத் தெரிந்துவிட்டது. இலட்சுமி நரசு செட்டியின் நிகழ்வை முழுவதுமாக ஆளுநர் அறிந்து கொள்ளாமல் அது ஒரு மதம் சார்ந்த பிரச்சினை என்று மட்டும் கருதியதுசரியானது இல்லை. எவ்வளவு எழுதினாலும் ஆளுநர் இரவிக்கும் அவரது அமைப்புகளுக்கும் நாணம் ஏற்படாது. இக் கட்டுரையை எழுதுவதன் மூலம் நம் தோழர்கள் செய்திகளைப் புதுப்பித்துக் கொள்வதற்குப் பயன்பட்டது என்பதுவே நமக்குக் கிடைத்த பலன் என்று நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

- திருக்குறள் (833)

---

மயிலாடுதுறை மாவட்டம் - சீர்காழி - நத்தம் அருகே சாலை விபத்து!

## உயிரிழந்த காவலர் குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 11 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நத்தம் சாலையின் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் மற்றும் நிதியுதவி அவர்கள் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு வருமாறு:

நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலராக பணி புரிந்து வரும் ராஜேஷ் (PC 699 SCPR), வயது 35,த/பெ. ரத்தினசாமி என்பவர் நேற்று முன்தினம் (09.03.2024) இரவு தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி காவல் சரகம், சீர்காழி - நத்தம் சாலையின் தடுப்பில் எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும், வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் காவலர் ராஜேஷ் அவர்கள் உயிரிழந்துள்ளது காவல்துறைக்கும், அவரது குடும்பத்தி னருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

காவலர் ராஜேஷ் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---



நாகை மாவட்டம், நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாக நிலை முகவர்கள், பாகநிலை குழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கூட்டம் பாப்பாக்கோயிலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் சீனிவாசன், கேஸ் வி.செந்தில், திருநாவுகரசு மற்றும் பலர் உள்ளனர்.

---

சோரஞ்சேரி ஊராட்சியில்

## சிமெண்ட் சாலை, குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், மார்ச் 11-

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பூந்தமல்லி ஒன்றியம், சோரஞ்சேரி காலனி, பஜனை கோவில் தெருவில் ரூ. 6 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பூமி பூஜையும், சோரஞ்சேரி கிராமம் ஈஸ்வரன் கோவில் தெருவில் ரூ. 20 லட்சம் மதிப்பில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கான பூமி பூஜையும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பூந்தமல்லி தொகுதி எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கி சிமெண்ட் சாலை அமைக்கவும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டவும் பணியினை தொடங்கி வைத்தார்.

இதில் கழக முன்னணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

மார்ச் 11 (1939)



குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!"என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.

ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி "இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா?" என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து "இல்லை, முடியாது" என்பதாக. "நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்" என தீர்ப்பளித்தார் நீதிபதி.

சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


கலைஞர் 100
1924 - 2023
நாடும் நமதே!..
நாற்பதும் நமதே!!...
ZIGZAG Digital
80567 67277
மார்ச் 11
பல்வேறு நலதிட்டங்கள் வழங்கும் விழாவிற்கு
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
நலத்திட்ட நாயகரே!..
வருக!..வருக!!...
இடம்:
அரசு கலைக்கல்லூரி,
தருமபுரி
மாண்புமிகு. M.R.K.பன்னீர்செல்வம், B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம். பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.கழகம்


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 11.03.2024, திங்கள்
இடம் : அரசு கலைக்கல்லூரி, தருமபுரி
பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைக்க தருமபுரிக்கு வருகை தரும்.
மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்
நலத்திட்ட நாயகரே!
வருக! வருக!!
என வரவேற்று மகிழும்
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், B.S.c., B.L.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன், M.Sc., Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
தடங்கம். பெ.சுப்ரமணி, Ex.M.L.A.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
வழக்கறிஞர். ஆ.மணி, B.Com.,B.L.,
தருமபுரி மேற்கு மாவட்ட துணை செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.



நாள்: 11.03.2024 இடம்: தருமபுரி
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வருகை தரும்...
திராவிட மாடல் நாயகரே!
கழகத்தலைவரே!!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே!
வருக! வருக!!
உங்கள் மொழி எங்கள் வழி!
மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc.,BL.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன் M.Sc.,Ph.D.,
மாவட்ட கழக செயலாளர், மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்ட திமுக.




# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## அவர்களை வணங்கி வரவேற்கிறோம்...

**M.R.K.பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

தடங்கம் **பெ.சுப்ரமணி** Ex.MLA
தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

முனைவர் **பி.பழனியப்பன்**
மு.அமைச்சர், தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர்

Dr. DNV.S.**செந்தில்குமார்** MDRD
தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

**பி.எஸ்.சீனிவாசன்**
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்

தருமபுரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள்

பி.என்.பி.இன்பசேகரன், ஆர்.தாமரைச்செல்வன், பி.தர்மச்செல்வன், ஆர்.பி.செந்தில்குமார், எம்.ஜி.சேகர், சி.செல்வராஜ், வே.தங்கமணி, ஆர்.ஆறுமுகம், பி.உமாசங்கர், எம்.ரேணுகாதேவி, நாட்டான் எம்.மாது, கே.எஸ்.ஆர்.சேட்டு, எ.சண்முகம், கே.பி.மல்லமுத்து, பி.வைகுந்தன், என்.செல்வராஜ், அ.கருணாநிதி, ஜி.சபரிநாதன், மடம் க.முருகேசன், வி.சண்முகம், எம்.வீரமணி, வி.நடராஜன், சரஸ்வதி துரைசாமி, சோ.மணி, எம்.வேலுமணி,

தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்

கே.ஆர்.சி.செல்வராஜ், பெ.இராஜகோபால், என்.எஸ்.கலைச்செல்வன், த.கார்த்திக், ஆர்.பி.முத்தமிழன், கோ.அசோக்குமார்

அன்புடன் வரவேற்கும் : **எம்.ஜி.எஸ்.வெங்கடேஷ்வரன்** B.E., M.S., (USA)
மாவட்ட அமைப்பாளர், தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி




# எங்கள் முதல்வரே

## வருக... வருக...

**M.R.K. பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

தடங்கம் **பெ.சுப்ரமணி**
மு.சட்டமன்ற உறுப்பினர் – தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

முனைவர் **பி.பழனியப்பன்**
முன்னாள் அமைச்சர், தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர்

*அன்புடன் வரவேற்கும்*

**எம்.ஜி.சேகர்** B.A., B.L.,
தலைமை செயற்குழு உறுப்பினர் – முன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்டம்



நாள் : 11.03.2024 திங்கள்
இடம் : அரசு கலைக்கல்லூரி, தருமபுரி
கலைஞர் 100 1924 - 2023
பல்வேறு நலதிட்ட உதவிகளை வழங்க வருகை தரும்
விவசாயிகளுக்கு புதிய 1,65,000 "இலவச மின் இணைப்பு திட்டம்" தந்து வாழ்வளித்த
தருமபுரி மக்களுக்கு ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் "திட்டம் I & திட்டம் II," தந்து மக்களின் தாகம் தீர்த்த
ஏழை மக்களுக்கு "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் மூலம் இருப்பிடம் தந்த
"இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" ஒலிக்கட்டும்
மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்
திராவிட நாயகர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு.
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், தருமபுரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
தடங்கம் பெ.சுப்ரமணி Ex.M.L.A.,
மாவட்ட கழக செயலாளர், தருமபுரி கிழக்கு மாவட்டம்
P.N.P.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மாநில விவசாய அணி துணை தலைவர், மு.மாவட்ட கழக செயலாளர்
Dr.DNV.S.செந்தில்குமார் M.D.R.D., M.P.,
வெளிநாடு வாழ் இந்தியர் நல அணி மாநில இணை செயலாளர்
N.செல்வராஜ் B.A.,
ஏரியூர் ஒன்றிய செயலாளர்
மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்
மடம்.K.முருகேசன் B.A.,
பென்னாகரம் தெற்கு ஒன்றிய செயலாளர்
G.சபரிநாதன் B.Sc.,B.Ed.,
பென்னாகரம் (வ) ஒன்றிய செயலாளர்
ஊ. ம. தலைவர், தித்தியோப்பனஅள்ளி
A.கருணாநிதி
பாலக்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர்
M.வீரமணி
பென்னாகரம் பேரூர் செயலாளர்
பேரூராட்சி மன்ற தலைவர்
V.சண்முகம்
பேரூர் செயலாளர்
பாப்பாரப்பட்டி
பென்னாகரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க, தருமபுரி கிழக்கு மாவட்டம்.




கலைஞர் 100 1924 - 2023
நாள் : 11.03.2024
இடம் : அரசு கலைக்கல்லூரி தருமபுரி.
பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைக்க தருமபுரிக்கு வருகை தரும்..
சமூகநீதியின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
வரவேற்று மகிழும்...
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் / மாவட்ட பொறுப்பு அமைச்சர்
பி.என்.பி.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மு.மாவட்ட கழக பொறுப்பாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.க




மார்ச் 11 2024 தருமபுரி மாவட்டத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
இந்திய திருநாட்டை வழிநடத்தபோகும்
திராவிட சுடரே!
வருக! வருக!!
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், B.Sc.,B.L.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன், M.Sc.,Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. தடங்கம் பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. Dr.DNV.S.செந்தில்குமார்
தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. கவிஞர் காசிமுத்து மாணிக்கம்
மாநில வர்த்தகர் அணி செயலாளர்
மெழிக்கல்.
அ.சத்தியமூர்த்தி
மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர்,
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.


மார்ச் 11
தருமபுரி மாவட்டத்திற்கு
அரசு நலதிட்டங்களை வழங்கும்
விழாவிற்கு வருகை தரும்
கழகத் தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை
வருக! வருக!! என அன்புடன் வரவேற்று மகிழும்....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம்.பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
என்றென்றும் தங்கள் வழியில் கழக பணியில்
பி.தர்மசெல்வன்
மாநில துணைச் செயலாளர், கழக வர்த்தகர் அணி,
தலைமை செயற்குழு உறுப்பினர்–பென்னாகரம், தருமபுரி


நாள்
11.03.2024
இடம்
தருமபுரி மாவட்டம்.
எல்லா மாவட்டங்களுக்கும்
எல்லா பகுதி மக்களுக்கும்
சமச்சீரான வளர்ச்சியை வழங்கி
எல்லோருக்கும் எல்லாம் தரும்
எங்கள் திராவிட மாடல் முதல்வரே!
ARASU ARTS
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
தமிழ் மக்களின் நாயகரே!
வருக! வருக!!
அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
தே.மதியழகன் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க.

# கொரோனாவில் மோடி செய்ததை மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்! 8

**கொ**ரோனா உலகநாடுகளை எல்லாம் உலுக்கி எடுத்த உயிர்க்கொல்லி நோய். இந்தியாவில் கொரோனா உச்சத்தில் இருந்தபோதுஒன்றிய பாசிச மோடியின் பாஜக அரசு அதன் நிர்வாகத் திறன் இன்மையாலும், அதன் அடிப்படைவாத மத வாத அனுகுமுறையாலும்செய்த கொடுமைகள் ஒன்றா இரண்டா...அவற்றையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் பாஜக பரிவாரங்கள்வாக்குகளைக் கேட்டு மீண்டும் துணிவுடன் மக்களை சந்திக்க வருகின்றனர்.

**கொடிய கொரோனா நோயின் போது மக்களை நிர்கதியாக்கிய பாஜகவையும், மோடியையும் மக்கள் ஒருபோதும் மறக்கப் போவதில்லை.அக்கொடுமைகளை மக்கள் மறக்கச் செய்வதற்காக பாஜக செய்யும் சதிவேலைகளை முறியடித்து மக்களின் நினைவுகளில் படிந்திருக்கும்கொரோனா கால கொடுமைகளையும் அந்த சூழலிலும் கொஞ்சமும் இரக்கமின்றி நடந்து கொண்ட பாஜக வின் மக்கள் விரோத போக்கையும்அம்பலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.**



2020 தொடக்கத்தில் இந்தியாவில் கொரோனா தாக்கம் எதிரொலிக்கத் தொடங்கியது. அதற்கு முன்பாகவே சீனா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா பரவுகின்ற செய்தியும் , அண்டை நாடானா இந்தியா கொரோனாவைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்சுகாதாரத்துறை வல்லுநர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். குறிப்பாக, இந்தியாவின் சர்வதேச விமான நிலையங்களின் மூலமாக அண்டை நாடுகளில் பரவியிருந்த கொரோனா இந்தியாவுக்குள் ஊடுருவும் வாய்ப்பு உள்ளது எனவே, சர்வதேச விமான நிலையங்களைமூடுவது குறித்தோ, அல்லது அங்கு வந்திறங்கும் பயணிகளை கொரோனா சோதனைகளுக்கு உட்படுத்துவது குறித்தோ ஒன்றிய அரசுசிந்தித்து அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

2020 ஜனவரியிலேயே கொரோனா தொற்று இந்தியாவுக்குள் வந்துவிட்டது என்ற செய்திகளைக் குறித்து கொஞ்சமும் கவலையின்றி 2020பிப்ரவரி 24 மற்றும் 25 ஆகிய இரண்டு தினங்கள் அன்றைய அமெரிக்க அதிபரி டொனால்ட் டிரம்ப்பை குஜராத் மாநிலத்திற்கு அழைத்து வந்தார் பிரதமர் மோடி. அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நெருங்கிய நிலையில் குஜராத்தில் “நமஸ்தே ட்ரம்ப்” என்ற பெயரில் 1 லட்சத்திற்கும் அதிகமானோரை திரட்டி அமெரிக்க அதிபருக்கு ஆதரவுக் கரம் நீட்டிக் கொண்டிருந்தார் மோடி.

**மோடி நடத்திய அந்த நிகழ்ச்சியில் ஒரே இடத்தில் கொரோனா பரவல் தொடங்கியிருந்த காலகட்டத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் கூடியதால்கொரோனா பரவல் இந்தியாவுக்குள் வேகமெடுத்தது.அரசியல் நோக்கர்கள், எதிர்க்கட்சிகள், சமூக செயல்பாட்டாளர்கள் இது குறித்து கேள்வி எழுப்பத் தொடங்கியதும் வழக்கம் போல்தனது மலினமான விசமத்தனமான மதவாத அரசியலைக் கையில் எடுத்தது பாஜக.**



டெல்லியில் இசுலாமிய அமைப்பான தப்லீக் ஜமாத் 2020 மார்ச் மாதம் அவர்களின் கருத்தரங்கம் ஒன்றை நடத்துகின்றனர்.மார்ச் 1 முதல் 21 வரை அக்கூட்டம் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்குகொரோனா தொற்று இருப்பதைக் காரணம் காட்டி, இந்தியா முழுவதும் கொரோனா பரவியதற்கு காரணமே இசுலாமியர்கள்தான் என்ற மிகக் கேவலமானமதவாத அரசியலை பாஜக ஆதரவாளர்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடக விவாதங்களிலும் பரப்பத் தொடங்கினர்.

டிரம்பை அழைத்து வந்து லட்சக்கணக்கானோரை திரட்டியதோடு மட்டுமின்றிகொரோனா தடுப்பு நடவடிக்கை எதையும் எடுக்காத மோடியின் நிர்வாகத் திறமையின்மையை மதவாத அரசியல் கொண்டு மறைக்க பாஜக இசுலாமிய வெறுப்பை கையில் எடுத்தது.

**மார்ச் 22 ஒரு நாள் முழு அடைப்பிற்கு பிரதமர் அழைப்பு கொடுத்ததன் பேரில், மக்கள் தங்களை வீடுகளுக்குள் முடக்கினர்.கொரோனாவை விரட்ட உலக நாடுகள் எல்லாம் அறிவியல் ரீதியில் ஆக்கப்பூர்வமான ஆய்வுகளை மேற்கொண்ட காலகட்டத்தில்மோடி மின் விளக்குகளை அணைக்கச் சொல்லி தீபங்கள் ஏற்றச் சொன்னார்.**

கொரோனாவிற்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகள் குறித்தோ, இந்தியாவுக்குள் கொரோனா ஊடுருவலைத் தடுக்க தான் தவறிவிட்டது குறித்தோமக்கள் சிந்தித்து விடக்கூடாது என்பதில் மோடி தெளிவாக இருந்தார். ஒருபுறம் இசுலாமிய வெறுப்பு விதைக்கப்பட்டது மறுபுறம்விளக்கேற்றச் சொல்லி மக்களின் மத நம்பிக்கைகளைத் தூண்டி அதில் தன் தவறுகளை மறைத்தார்.

**கொரோனாவே போய்விடு என்று எல்லோரும் சேர்ந்து சொன்னால் கொரோனா ஓடிவிடும் என்று ஒன்றிய அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே ஒரு ஆகப்பெரும் அறிவியல் கண்டுபிடிப்பைச் சொன்ன போது உலக நாடுகள் இந்தியர்களின் நிலையை எண்ணி பரிதாபப்பட்டன.2020 மார்ச் 24 முதல் 3 வாரகாலத்திற்கு முழு அடைப்பு என்று அறிவித்தார் பிரதமர் மோடி.இந்த நாட்டின் ஏழை எளிய மக்கள், அவர்களின் வாழ்வாதாரம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் வந்த அந்த அறிவிப்பு கொரோனாவை விட கொடுமையானதாக இருந்தது.ஒரு மிகப்பெரிய பேரிடர் கொரோனா என்பதை புரிந்து கொண்ட மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு தர தயாராகவே இருந்தனர்.**


**தமிழ்க் கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்




அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் அரசிடம் இருந்து தங்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான சிறு உதவி. ஆனால், அன்றைக்கு ஒன்றியத்தில் இருந்த மோடி அரசும் அதைச் செய்யவில்லை. தமிழ்நாட்டை அப்போது ஆண்ட அதிமுக அரசும் அதை அப்போது செய்யவில்லை.ஒருபுறம் அன்றாடம் காய்சிகள் தங்கள் தினசரி உணவிற்கே போராடும் நிலைக்கு தள்ளிவிட்ட மோடி மறுபுறம் பெட்ரோல், டீசல், கேஸ் விலைகளைஈவு இரக்கமின்றி உயர்த்தத் தொடங்கினார்.

சொந்த நாட்டு மக்கள் வாழவே வழியின்றி கொத்துக் கொத்தாக மாண்டு மடிந்தனர். டெல்லி உள்ளிட்ட இடங்களில் பிணங்களை எரிக்கஇடமின்றி சாலைகளில் பிணங்கள் கிடத்தப்பட்டிருந்த காட்சிகள் காண்போரை பதறச் செய்தன.வேலைவாய்ப்புக்காக புலம் பெயர்ந்த இந்தியர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு பல நூறு கிலோ மீட்டர்கள் நடந்தே சென்றனர்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் சந்திர சேகர் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஒரு கேள்விஎழுப்புகிறார். கொரோனா பேரிடர் காலத்தில் 2020 ஜனவரி 1 முதல் 2020 டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் ரயில்வே இருப்புப் பாதை வழியாக நடந்து சென்றவர்கள் எத்தனை பேர் பலியாகியுள்ளனர் என்ற



கேள்விக்கு கிடைத்த பதில் தேசத்தையேஅதிர்ச்சிக்குள்ளாக்கியது.

**8733 இந்திய குடிமக்கள் கொரோனா காலகட்டத்தில் மோடி அறிவித்த முழு அடைப்பால் நடந்தே தங்கள் ஊர்களுக்கு செல்லும் போதுரயில்வே பாதை வழியாகச் சென்றவர்கள் சுமார் 8733 பேர் அந்த ஓராண்டில் மட்டும் மரணமடைந்துள்ளனர் என்ற செய்தி ஊடகங்களில் வெளியானது.இவர்களில் பெரும்பாலோனோர் வட இந்தியர்கள். புலம்**



படம் : டெல்லியில் கொரோனாவால் உயிரிழந்த பிணங்களை சாலையோரம் வைத்து எரிக்கப்பட்ட காட்சி

**பெயர் தொழிலாளர்கள்.**

**வேலைக்காக புலம் பெயர்ந்து குஜராத் சென்ற ஒரு பெண் முழு அடைப்பு காலகட்டத்தில் பீகார் திரும்புகிறார்.பீகார் ரயில் நிலையத்தில்அந்த பெண் இறந்து போகிறாள். அவள் இறந்து போனது கூட தெரியாமல் அந்த பெண்ணின் குழந்தை தாயின் சடலத்தில் தாய்ப்பால் தேடிய காட்சி. உலக நாடுகளை எல்லாம் உலுக்கியது.இந்த துயரங்களையெல்லாம் பார்த்து துடி துடித்துப் போன எதிர்க்கட்சிகள் மோடியை நோக்கி, பாஜக அரசை நோக்கி கேள்வி எழுப்பினார்கள்.**

பிள்ளை குட்டிகளோடு,பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு, நடந்தே செல்லும் புலம் பெயர்த் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்ற கேளவியை ராகுல் காந்தி எழுப்பிய போது, அவ்வளவு அக்கறை இருந்தால் அவர்களோடு பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு எதிர்கட்சித் தலைவர்கள்நடக்கட்டும் என்று ஏளனமாக ஆணவமாக ஒரு பதிலைத் தந்தார் இந்த தேசத்தின் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்.

இவர்தான், வெங்காய விலை ஏறிப் போய் விட்டதே என்ற கேள்விக்கு, அது குறித்து தனக்குத் தெரியாது, தான் வெங்காயம் சாப்பிடும் குடும்பத்தில் இருந்து வரவில்லை என்றவர்.இவர்கள்தான் இந்த தேசத்தை மீண்டும் ஆளத் துடிக்கின்றனர்.

ஏழை மக்களின் எல்லா துயரங்களுக்கு மத்தியிலும் இவர்கள் பெருமுதலாளிகளின் கடனை 24 லட்சம் கோடி தள்ளுபடி செய்துள்ளர்.ஆனால், கொரோனா தடுப்பூசியைக் கூட மக்கள் கட்டணமின்றிப் பெற சட்டப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை இருந்தது என்பதை எப்படி மறக்க முடியும்.. கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் உரிமையை தனியார் நிறுவனத்திற்கு கொடுத்தது மோடி அரசு. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது,



தமிழ்நாட்டு மக்களைக் காக்க வெளிநாடுகளில் இருந்து நேரடியாக மாநில அரசுதடுப்பூசிகளை இறக்குமதி செய்துகொள்ள முயற்சி எடுத்தபோது, அதற்கு முட்டுக்கட்டைகளைப் போட்டது மோடி அரசு.

செங்கல்பட்டில் உள்ள தடுப்பூசி மருந்து நிறுவனத்தில் கொரோனாவிற்கு தடுப்பூசி தயாரிக்க நம் தமிழ்நாடு அரசு தயாரானபோதுஅதற்கும் முட்டுக்கட்டை வீழ்ந்தது.இந்தியாவில் கொரோனாவை தடுக்க வழியின்றி மோடி விழி பிதுங்கி நின்றபோது, தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற நம் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக கொரோனா நிவாரண நிதியை மக்களிடம் நேரடியாகக் கொடுத்தார். முதற்கட்டமாக ரூபாய் 2000 கொடுக்கப்பட்டது. மேலும், தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தை பயன்படுத்தி கொரோனா சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். தொடர்ந்து கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் அறைக்குள்ளேயே சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் சொன்னபோது,கொரோனா குறித்த மக்களின் பயத்தை போக்கி மாபெரும் மக்கள் தலைவனாக மக்கள் மனங்களில் இடம்பிடித்தார் நம் முதலமைச்சர்.



கவச உடையில் கொரோனா நோயாளிகளை காணச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின்

நாம் யார் பக்கம் நிற்கப் போகிறோம். கவச உடையுடன் கொரோனா வார்டுக்குள் சென்று மக்களுடன் நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டிய நம் முதல்வர் ஸ்டாலின் பக்கமா.? அல்லது மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் கவச உடையுடன் கடலுக்கு அடியில் சென்று ஸ்கூபா டைவிங் செய்த மோடியின் பக்கமா ?இந்தத் தேர்தலில் தமிழ்நாடு முடிவெடுத்துவிட்டது.

நலத்திட்டங்களை அள்ளித் தரும், மக்கள் நலனுக்காகசமரசமின்றிப் போராடும் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பக்கம்தான் நிற்கப் போகிறோம் என்று.தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்தியாவும் பாசிச பாஜகவை விரட்டி அடிக்க இந்தியா கூட்டணியின்



கரத்தை வலுப்படுத்த முடிவெடுத்துவிட்டது.

இந்திய மக்களின் அந்த முடிவால் ஏற்பட்ட அச்சம்தான் மோடியை கேஸ் சிலிண்டரின் விலையில் 100 ரூபாயை குறைக்கச் செய்துள்ளது.மக்களை 10 ஆண்டுகளாக வாட்டி வதைத்துவிட்டு ஆட்சி முடிவடையும் தருவாயில் 600 ரூபாயை ஏற்றி 100 ரூபாயைக் குறைக்கும் உங்களின் அரசியல் நாடகம் இனியும் வெற்றி பெறாது திரு.நரேந்திர தாமோதர தாஸ் அவர்களே. உங்கள் தோல்வி வெகு தூரத்தில் இல்லை. பாசிச பாஜக தோற்கட்டும்

சமூக நீதி பேணும் இந்தியா வெல்லட்டும்..!

**(தொடரும்...)**



பெரம்பலூர் நகர் மன்ற உறுப்பினர் துரை.காமராஜ் வயது (52), உடல்நலக்குறைவால் மறைந்ததையொட்டி, அரனாரையில் உள்ள அவரது இல்லத்திற்கு, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம். பிரபாகரன், குன்னம் சி.இராஜேந்திரன், ச.அ.பெருநற்கிள்ளி, வழக்கறிஞர் என். ராஜேந்திரன், இரா.ப.பரமேஷ்குமார், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், சன்.சம்பத், செ.ரவிச்சந்திரன், ம. ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி,தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், அம்பிகா ராஜேந்திரன், து.ஹரிபாஸ்கர், தங்க.கமல், டி.ஆர். சிவசங்கர், எஸ்.அழகுவேல், ரா.சிவா, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் அரனாரை ஜெயக்குமார் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர்



தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டும் பணி நேற்று முன்தினம் (09.03.2024) தூத்துக்குடியில் உள்ள திருநெல்வேலி பைபாஸ் சந்திப்பில் துவங்கப்பட்டது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, வண்ண ஓவியங்கள் தீட்டும் பணியைத் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் இரா.ஐஸ்வர்யா, தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் செ.ஜெனிட்டா, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேராசிரியர் படத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வுகளில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம். அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம் எல்.ஏ, ஆ.செந்தில், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன், சி.ஆர்.வி.சித்ரா, அ.ரெத்தினம், சி.அரங்கநாயகம், மு.கலைஞர் கருணாநிதி, ஆ மரிய எட்வின், மா.மணிவேல், தெய்வானை, செ.ரமேஷ், பால்ராஜ், பிரேம் ஆனந்த், ராமச்சந்திரன், சி.மதியழகன், ஜேம்ஸ், கண்மணி சுப்பு, விஜயக்குமார், தியாகு, ஆசைத்தம்பி, குமான், ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

## கலைஞர் கணினி கல்வியகத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள்!

சென்னை, மார்ச் 11 - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சீரிய முயற்சியால், தொடர்ந்து நான்காம் ஆண்டில் சைதாப்பேட்டையில் படித்த பொருளாதாரத்தில் நலித்த குடும்பங்களைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற, ஆண்பெண் என இருபாலருக்கும் கணினிப் பயிற்சி அளித்து அவர்களுக்கு முன்னணி தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் சிறப்பான பணியை “கலைஞர் கணினி கல்வியகம்” என்ற நிறுவனத்தின் பெயரில் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி நடத்தி வருகிறார். இக்கல்வியகத்தை கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி 1அன்று சைதாப்பேட்டை பஜார் சாலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச.த.ராதா**
**மார்ச் 11 (2017)**



இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கி தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 14 திருக்கோயில்களில்

# ரூ.131.15 கோடி மதிப்பில் 20 புதிய திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்! 17 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 11-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 14 திரு க்கோயில்களில் ரூ.131.15 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 15 திருக்கோயில்களில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டிலான 17 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, சோளிங்கர், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூ.20.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவட ஊர்தியை பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக உயர்த்தப்பட்ட அரசு மானியமாக ரூ.5 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக 14 திருக்கோயில்களில் ரூ.131.15 கோடி மதிப்பீட்டிலான திருமண மண்டபங்கள், சுற்றுப்பிரகார மண்டபம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, வகுப்பறைகள் மற்றும் நூலகம், இளைப்பாறும் மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்கள், வணிக வளாகங்கள், பெருந்திட்ட வளாகப் பணிகள் போன்ற 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 15 திருக்கோயில்களில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விருந்து மண்டபம், காதுகுத்து மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், பணியாளர் குடியிருப்பு, திருமண மண்டபம், சஷ்டி மண்டபம், வாகன நிறுத்துமிடம், சேவார்த்திகள் தங்கும் விடுதி, கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், அர்ச்சகர் குடியிருப்பு, அன்னதான கூடம், வைணவ பிரபந்த பாடசாலை, வணிக வளாகம், பள்ளி அலுவலகம் மற்றும் நூலகம் போன்ற 17 பணிகளை திறந்து வைத்தார்.

### 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகம் அமைக்கும் பணிகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 33.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, பேருந்து நிலைய அபிவிருத்தி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பக்தர்கள் ஓய்வு மண்டபம் கட்டும் பணிகள்; திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் நூலகம் கட்டும் பணிகள் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 3.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இளைப்பாறும் மண்டபம் கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுப்பிரகார மண்டபம் கட்டும் பணி; கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை, அருள்மிகு கல்யாண வெங்கட்ரமணசுவாமி திருக்கோயிலில் 5.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; திருவாரூர் மாவட்டம், மாப்பிள்ளைக்குப்பம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயிலில் 4.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி;

திருவண்ணாமலை மாவட்டம், மங்கலம், அருள்மிகு போர் ம ன் ன லி ங் கே ஸ் வ ர ர் திருக்கோயி லில் 3.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோ யிலில் 3.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி மற்றும் சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், திருபாதிரிபுலியூரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணி யசுவாமி திருக்கோயிலில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி; காஞ்சிபுரத்தில் 2.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி;

தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில், 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி மற்றும் குமாரசாமிபேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; தேனி மாவட்டம், தேனியில், 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; நாமக்கல் மாவட்டம், காளிப்பட்டி, அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுப்பிரகார மண்டபம் கட்டும் பணி; சென்னை மாவட்டம், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; என மொத்தம் 131.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

15 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்

மதுரை மாவட்டம், அழகர் கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் 14.14 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விருந்து மண்டபம், காதுகுத்து மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், வணிக வளாகம், அருள்மிகு சுந்தரராஜ உயர்நிலைப் பள்ளி அலுவலகம் மற்றும் நூலகம்; அழகர்கோவில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலில் 98 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளு டன் கூடிய சஷ்டி மண்டபம்; திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 96 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடம்; விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 3.22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர் குடியிருப்பு; விழுப்புரம் மாவட்டம், கோலியனூர், அருள்மிகு புத்துவாயம்மன் திருக்கோயிலில் 52 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சேவார்த்திகள் தங்கும் விடுதி;

நாகப்பட்டினம் மாவட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பி ரமணியசுவாமி திருக்கோயிலில் 1.48 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபம்; திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயிலில் 1.20 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட திருமண மண்டபம்; கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் 92 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி கூடம்; கிருஷ்ணன் கோவில், அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சகர் குடியிருப்பு; கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரம ணியசுவாமி திருக்கோயிலில் 89 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம்;

தஞ்சாவூர் மாவட்டம், கரம்பயம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபம்; சூரக்கோட்டை, அருள்மிகு பரமநாத அய்யனார் திருக்கோயிலில் 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அன்னதானக் கூடம்; செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 96 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வைணவ பிரபந்த பாடசாலை; திருப்போரூர், அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலில் 94 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் ஆதினக்குடியிருப்பு கட்டடம்; திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் 1.14 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மின்சார அறை; என மொத்தம் 29.27 கோடி ரூபாய் செலவிலான 17 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சோளிங்கர், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூ.20.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவட ஊர்தி, பக்தர்களுக்கான காத்திருப்பு அறை உள்ளிட்ட வசதிகளை திறந்து வைத்தல்

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 9.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கம்பிவட ஊர்தி அமைத்திட 2010 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு கடந்த ஆட்சிக் காலத்தில் 50 சதவீத பணிகளே நிறைவுற்றிருந்தன.

இந்நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றபின் மீதமுள்ள பணிகளை நிறைவேற்றி, கூடுதலாக 11 கோடி ரூபாய் செலவில் பக்தர்களுக்கான காத்திருப்பு அறை, மின்தூக்கி, உணவகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், கட்டணச் சீட்டு மையம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கம்பிவட ஊர்தி பக்தர்களின் பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக ரூ.5 கோடி அரசு மானியம் வழங்குதல், இந்து சமய அறநிலையத் துறையின் 2023—2024-ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின், “புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களின் நிர்வாக செலவினத்திற்காக வழங்கப்பட்டு வரும் அரசு மானியத் தொகை ரூபாய் 3 கோடியிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்” என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களின் அன்றாட நித்தியபடி பூஜை மற்றும் திருவிழா செலவுகள், திருக்கோயில் திருப்பணி, பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றிற்காக 5 கோடி ரூபாய்க்கான காசோலையினை புதுக்கோட்டை தேவஸ்தான தக்கார்/உதவி ஆணையர் அவர்களிடம் வழங்கினார்.

புதுக்கோட்டை தேவஸ்தானத்திலுள்ள 225 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக 2021-2022-ஆம் நிதியாண்டு வரை 1 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், முதலமைச்சர் அவர்கள், அம்மானியத்தை 3 கோடி ரூபாயாக உயர்த்தி, கடந்த 27.12.2021 அன்று வழங்கினார்கள். தற்போது அத்தொகை போதுமானதாக இல்லாததால் இந்த நிதியாண்டு முதல் அரசு மானியத் தொகை 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.வளர்மதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் குளவாய் பட்டி, வேலூர் பூமரம், ஆத்துப்பட்டி, ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும். விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் வரவேற்புரையிலும் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் த.சந்திரசேகரன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் மு.பி. ம.சத்தியசீலன், அ.இளங்குமரன், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், எம்.எம்.பாலு, எம்.ஆர். அன்பழகன், சுசி (ஏ) சுகுமாறன், சண்முகசுந்தரம், மெடிக்கல் குமார், மணிமொழியன், செந்தில்நாதன், எம்.பி.ஜெயபால், ஜி.எஸ்.டி.செல்வம், கே.ரெங்கராஜ், சி.வி.கிருஷ்ணன் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை நகர்மன்றத் தலைவர் திருமதி செ.அழகுசுந்தரவள்ளி மற்றும் சி.செல்வம் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 09.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் கலைஞர் தமிழ் குறித்து தயாரிக்கப்பட்ட 100 நூல்களை வெளியிட்டு, நூலாசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்து, அவர்களுடன் முதலமைச்சர் அவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (9.3.2024) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே நாடாளுமன்ற மக்களவை தேர்தலுக்கான தொகுதி உடன்படிக்கையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி,பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், பேச்சுவார்த்தை குழு ஒருங்கிணைப்பாளர் முகுல் வாஸ்னிக், காங்கிரஸ் கட்சியின் தமிழக பொறுப்பாளர் அஜோய்குமார், காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் எஸ். ராஜேஷ் குமார் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

**நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் கு.செல்வபெருந்தகை அவர்களும் இன்று (9–3–2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், காங்கிரஸ் கட்சி, தமிழகத்தில் 9 (ஒன்பது) நாடாளுமன்றத் தொகுதிகளிலும் – புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியும் என மொத்தம் 10 (பத்து) தொகுதிகளை பங்கிட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.**

**(கு. செல்வபெருந்தகை)**
**தலைவர்,**
**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**

9/3/2024
**(மு.க.ஸ்டாலின்)**
**தலைவர்,**
**தி.மு.க.**

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024



நேற்று முன்தினம் (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2024 நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தும், 2025 நாடாளுமன்ற மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த உடன்படிக்கையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் எ. அருணாசலம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

**திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் அவர்களும் இன்று (9–3–2024) கலந்து பேசியதில், 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் தேர்தல் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வதெனவும்;**

**வருகிற 2025ஆம் ஆண்டு நடைபெற உள்ள மாநிலங்களவை (Rajya Sabha) தேர்தலில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.**

**(கமல்ஹாசன்)**
**தலைவர்,**
**மக்கள் நீதி மய்யம்**

9/3/2024
**(மு.க.ஸ்டாலின்)**
**தலைவர்,**
**தி.மு.க.**

# காவல்துறை சார்பில் நடமாடும் கட்டளை - கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாடுகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 11-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, அவ்வாகனங்களுக்கான சாவியினை சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், அவர்களிடம் வழங்கினார்.

நவீன தொழில்நுட்பங்களை கொண்டு உள்நாட்டு பாதுகாப்பு சவால்களை காவல்துறை அதிகாரிகள் திறம்பட கையாளுவதற்காக மாநில காவல் படைகளின் நவீனமயமாக்கல் (Modernisation of Police Force) திட்டத்தின் கீழ் 93.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெகா சிட்டி திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1030 இடங்களில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் நிறுவப்பட்ட 3090 Artificial Intelligence - ஆல் இயங்கும் CCTV கேமராக்கள், 753 வாகன கண்காணிப்பு சாதனங்கள், 7 வான்வழி கண்காணிப்பு ட்ரோன்கள் மற்றும் 7 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் நகரம் முழுவதும் விரிவான கண்காணிப்பு உறுதி செய்யப்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் (Mobile Command and Control Centre - MCCC) நகர கண்காணிப்புக்காக பயன்படுத்த தயாராக உள்ளது. மேலும், 2250 கேமராக்கள் மற்றும் 650 வாகனங்கள் நிகழ்நேர கண்காணிப்பிற்காக தானியங்கி வாகன இருப்பிட அமைப்புடன் (Automatic Vehicle Location System - AVLS) நிறுவப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர காவல் நிலையங்களில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு, நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ட்ரோன்கள் மற்றும் CCTV கேமராக்கள் நிகழ்நேர வீடியோ பதிவுகளை அனுப்புகின்றன. MCCC வாகனங்கள் நகரம் முழுவதும் முக்கியமான பொதுக் கூட்டங்கள், போராட்டங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் இடங்களில் நிறுத்தப்பட்டு நிகழ்நேர வீடியோவை பதிவு செய்ய தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும்.

நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இரண்டு நைட் விஷன் ட்ரோன்கள், ஒருங்கிணைந்த கேமராக்கள் மற்றும் ஒலிப்பெருக்கி அமைப்புகள் மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர் விற்கான வான்வழி பார்வையை வழங்குகின்றன மற்றும் போக்குவரத்து நெரிசலை கண் காணித்து சரி செய்யவும் பயன்படுத்தப்படும். இந்த அம்சங்கள் அவசர காலங்களில் திறமையான தகவல்தொடர்புக்கு பயன்படும்.

இந்த நிகழ்ச்சியில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை தலைவர் (தெற்கு மண்டலம்) பிரேம் ஆனந்த் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா -பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, மார்ச் 11-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் சாதனை விளக்கம் என முப்பெரும் விழா பொதுக் கூட்டம் திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் சார்பில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு திருவெறும்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கங்காதரன் தலைமை வகித்தார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினரும் ஒன்றிய குழு துணை தலைவருமான நவல்பட்டு சண்முகம் பொருளாளர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக திமுக துணை பொதுச்செயலாளர் தமிழக ஊரக வளர்ச்சி துறை மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி, திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பின் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

திருச்சி மாவட்டத்தில் தி.மு.க.வை வளர்த்தெடுத்த முன்னாள் அமைச்சரும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் செயலாளருமான அன்பில் தர்மலிங்கத்தின் 31ஆம் ஆண்டு நினைவு நாளை நாம் அனுசரிக்கின்றோம். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அமைச்சர் ஐ.பெரியசாமி, கலைஞர், அன்பில் தர்மலிங்கத்துடன் நீண்ட நெடிய நட்புள்ளவர், கழக துணைப் பொதுச் செயலாளர், ஒரு அமைச்சர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்பதற்கு பெரியசாமி போன்ற மூத்தவர்கள் தான் எங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். அவர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வது எங்களுக்கு பெருமையானது . பா.ஜ.க. ஆட்சி ஆனது 10 ஆண்டுகள் காலம் ஆட்சி செய்து வந்துள்ளது மோடி 2014 ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் என்னை எப்படியாவது வெற்றி பெற செய்ய வையுங்கள் பெட்ரோல் விலை டீசல் விலை சிலிண்டர் விலை நான் குறைப்பேன் என்று கூறினார். 2014 இல் 45 ரூபாய் மற்றும் 50 ரூபாய் விற்ற டீசல் மற்றும் பெட்ரோல் இன்று 103 ரூபாய் 95 ரூபாய் என விற்கப்படுகின்றது. ஒரு சிலிண்டர் விலை அன்று ரூ.400 இருந்தது இன்று 1200 ரூபாயாக உள்ளது. கிட்டத்தட்ட 800 ரூபாய் அதிகரித்துள்ளது சிலிண்டர் விலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்காகவே வாழும் தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை அளித்து வருகின்றார் என்றார்.

இக்கூட்டத்தில் மாநகர செயலாளர் மு. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன், வன்னை அரங்கநாதன், மாவட்ட அவை தலைவர் கோவிந்தராஜன், மாநில நிர்வாகி செந்தில், துணை மேயர் திவ்யா மாவட்ட துணை செயலாளர் செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, மாவட்ட பொருளாளர் குணசேகரன், பகுதி செயலாளர் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவகுமார் ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.எம் கருணாநிதி மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம், நாகை நம்பியார் நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் புயல் பாதுகாப்பு மைய கட்டிடத்தை சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை நகர்மன்ற உறுப்பினர் நம்பியார்நகர் சுரேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

மொழி பெயர்க்கப்பட்ட பாடநூல்கள் வெளியிட்டபோது...





# திராவிட மாடல் அரசு

59

# அழகுத் தமிழில் உயர் கல்வி... உலக அறிவு!

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

'குழந்தைகள் தங்கள் தொடக்கக் கல்வியைத் தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும். அப்படிப் படித்தால்தான் வலுவான அடித்தளம் கிடைக்கும்' என்பது உலகம் முழுவதிலும் உள்ள கல்வியாளர்களின் கருத்து. இது அறிவியல்பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்ட ஒன்று.

அடிப்படைக் கல்வியை மட்டுமல்ல, உயர் கல்வியைக் கூட தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும் என்று சொல்லி, பல நாடுகள் தங்களது தாய்மொழியிலேயே மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்படிப்புகள் உள்ளிட்ட பல படிப்புகளை வழங்கி வருகின்றன.

இந்தியாவைப் பொறுத்த அளவில், 'தாய்மொழியில் உயர் கல்வி' என்ற கருத்தை முதன்முதலில் சிந்தித்த மாநிலம் தமிழ்நாடு. பிறகு அது 'தமிழில் கல்லூரிக் கல்வி' என்ற பொருளில் கலைத்துறைப் படிப்புகள் மட்டும் தமிழில் வழங்கப்பட்டு வந்தன. 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், கலைத்துறைப் படிப்புகள் மட்டுமல்லாது, அறிவியல் படிப்புகளும் தமிழில் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், உயர் கல்வியில் தமிழுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில்தான் பொறியியல் கல்வி தமிழில் வழங்கப்பட்டது. அதன் நீட்சியாகவே தற்போது மருத்துவப் படிப்புக்கான நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், பொறியியல் மட்டுமல்லாது, இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், வரலாறு போன்ற துறை சார்ந்த படிப்புகளுக்கான பாடநூல்களை, தமிழில் வழங்க, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு' விதைத்திருக்கும் வித்தே **'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்'**.

## பாடநூல் கழகமும் மொழிபெயர்ப்பும்

1970களில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் 'தமிழ்நாடு பாடநூல் கழகம்' தொடங்கப்பட்டது. அந்தக் காலத்தில் எல்லாம் பள்ளிப் புத்தகங்களை தனியார் பள்ளிகள்தான் வெளியிட்டு வந்தன. அவை சாமானிய மக்களால் வாங்க முடியாமல் போனது. அவ்வாறு பள்ளிப் புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்க இயலாத காரணத்தால், பள்ளியில் இருந்து இடை நின்றவர்கள் ஏராளம். பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு, பாடப் புத்தகங்களின் விலை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணித்தான் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாடநூல் கழகம், பள்ளிப் புத்தகங்களை அச்சடித்து குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கி, மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றியது.

பிறகு, கல்லூரிப் படிப்புகளை தமிழில் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அவற்றிற்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன. 1967 -ஆம் ஆண்டு முதல் 1976 -ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்து, 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அந்த நுல்களில் பல கடந்த சில ஆண்டுகளாக ஆவணபதிப்புகளாக வெளியிடப்பட்டு வருகின்றன.

### மூலப் பொருள், பயிற்சிப் பொருள்!

தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் பியர்சன் கூட்டு வெளியீடாக 11 மற்றும் 12- ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மொழி பெயர்க்கப்பட்டுள்ள பாடநூல்கள் 'நீட்', 'எய்ம்ஸ்', 'ஜிப்மர்' உள்ளிட்ட உயர்கல்வி மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான பயிற்சிப் பொருளாகவும் விளங்குகின்றன. இந்நூல்களில் அடங்கியுள்ள பாடங்கள், மிகவும் கவனமாக, தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. மேலும், இந்நூல்களை 'என்.சி.இ.ஆர்.டி' (NCERT) அடிப்படையில் அமைந்துள்ள 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளுக்கும் மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம்.

அதன் பிறகு, சுமார் 40 ஆண்டுகள் கவனம் பெறாமல் இருந்த இந்த மொழிபெயர்ப்பு முயற்சிக்கு, 2021-இல் 'திராவிட மாடல் அரசு' அமைந்த பிறகு 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்' மூலம்தான் மீண்டும் உயிர் கிடைத்தது.

## முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

நமது 'திராவிட மாடல் அரசு' அமைந்த பிறகு, தமிழ்நாடு பாடநூல் கழகம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்களின் சிந்தனைகளை, தமிழ்நாட்டின் சமகால இலக்கியப் படைப்புகளை ஆங்கிலம் உள்ளிட்ட 22 உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் எடுத்துச் செல்ல 'திசை தோறும் திராவிடம்' எனும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அந்தப் புத்தகங்கள் எல்லாம் பொது வாசகர்களுக்கு உரியவை.

அவை இல்லாமல், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்காகவே துறைசார் பாடநூல்களை தமிழில் கொண்டு வரும் முயற்சிதான், 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் கீழ், மருத்துவம், வேளாண்மை, வானியல், தொழில்நுட்பம், சட்டம், பொருளாதாரம், கணிதம், கால்நடை மருத்துவம், புவியியல், புள்ளியியல் ஆகிய துறைகளுக்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் இதுவரை, சுமார் 90 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் வெளியாகி உள்ளன.

இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு துறையின் பாடநூல் மொழிபெயர்ப்புகளுக்கு துறைசார் அறிஞர்களைக் கொண்ட தனித்தனிக் குழுக்கள் உள்ளன. அதில் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர். எனவே, மொழிபெயர்ப்பு முதல் பிழைதிருத்துதல் வரையிலான எல்லா பணிகளிலும் அவர்களின் பங்களிப்பு இருப்பதால் கருத்துப் பிறழ்வு, பொருள் மயக்கம் போன்ற எந்தத் தவறும் நிகழ்ந்து விடாதபடி, செம்மையான மொழிபெயர்ப்புகள் வருகின்றன.

## வளம் சேர்க்கும் கலைச்சொல்லாக்கம்

உயர் கல்விக்கான பாடநூல்களை தமிழில் வழங்குவதில் உள்ள மிகப்பெரிய சிக்கலே, துறைசார் சொற்களுக்கான பொருளை தமிழில் எளிமையாகவும் புதுமையாகவும் வழங்க வேண்டும் என்பதுதான். ஆங்கிலத்தில் 'கிளாஸரி' என்று சொல்லப்படும் அவற்றை தமிழில் 'கலைச்சொல்லாக்கம்' என்று வழங்கும் முயற்சிகள் பல காலமாக நடைபெற்று வருகின்றன. எனினும், 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்ட'த்தின் கீழ், இந்த கலைச்சொல்லாக்க முயற்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

துறைசார் பாடநூல்களை மொழிபெயர்க்கும் போது, அவற்றுக்கான கலைச்சொல்லாக்கங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் இடம்பெற கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தவிர, தமிழில் கலைச்சொல்லாக்க வரலாறு குறித்தும் புத்தகங்கள் கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழுக்கு வளம் சேர்க்கும் இன்னொரு முயற்சி இது.

## கூட்டு வெளியீடுகள்

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் மொழிபெயர்க்கப்படும் பாடநூல்கள் எல்லாம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிடுகிறது. கூடுதலாக, பாடநூல் கழகம், 'பியர்சன்' போன்ற இதர பதிப்பகங்களுடன் இணைந்தும் துறைசார் பாடநூல்களைக் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வருகிறது.

பியர்சன் என்பது 70 உலக நாடுகளில் பரந்து விரிந்திருக்கும் ஓர் உலகளாவிய கற்றல் நிறுவனமாகும். நுணுக்கப்பார்வையும் உலகத்தரமான நிபுணத்துவமும் நெடிய வரலாறும் கொண்ட இந்தப் பதிப்பகம், அறிவியல் துறை பாடநூல்களை வெளியிடுவதில் சர்வதேச அளவில் புகழ்பெற்றது. அந்தப் பதிப்பகத்துடன் இணைந்து 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடநூல்கள் தமிழில் கொண்டு வரப்பட்டுள்ளன.

'திராவிட மாடல் அரசு' மேற்கொள்ளும் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள், உலகை நம் வசமாக்கும் இன்னொரு கிரியா ஊக்கி...!

**...சாதனை தொடரும்**

### வீட்டுக்கு வரும் நூலகம்!



அறிவியக்கத் தளத்தில் தமிழ்நாட்டின் தவிர்க்க முடியாத மையமாக உயர்ந்து நிற்கிறது, அண்ணா நூற்றாண்டு நூலகம். எட்டு தளங்கள் கொண்ட இந்த பிரமாண்ட நூலகத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் வாசகர்களின் அறிவுத் தேடலை நிறைவு செய்கின்றன. போட்டித் தேர்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் அங்கேயே படித்து, குறிப்புகள் எடுக்கும் வசதிகளுடன் தற்போது, நூல்களை வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வசதிகளை அளிக்க உள்ளது, அண்ணா நூற்றாண்டு நூலகம்.

வாசகர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, இந்த வசதியை அளிக்க உள்ளது. முதற்கட்டமாக சிறார் பிரிவு மற்றும் தமிழ்ப் பிரிவு நூல்களை, வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்கலாம். 30 நாட்களில் திருப்பி அளிக்க வேண்டும் என்கிற வழிகாட்டுதல்படி, வாசகர்கள் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். இரண்டு முறை புதுப்பித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படும். 'புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகையே புத்தகமாகப் படிப்போம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நூலகம், வீட்டுக்கே உலகைக் கொண்டு வருகிறது.

### :.ப்ளாஷ்பேக்



வெங்கடராமன்



### பிறந்த நாள் சந்திப்பு!

என் தந்தை நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி, 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வென்று மூன்றாவது முறையாக, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு, என்னுடைய தந்தையுடன் கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். இளம் வயதில் அவரை சந்தித்தது, இன்றைக்கும் மனதை விட்டு அகலாமல் அப்படியே இருக்கிறது.

**-வி.கி.வெங்கடராமன்,**
**அண்ணா கிராமம் ஒன்றியக் கழகச் செயலாளர்,**
**கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### டெல்லியில் ஒலித்த கலைஞரின் குரல்!

1969-இல் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் முதல்வராகக் கலந்துகொண்ட கலைஞர், "மத்திய- மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது. முதற்கட்டமாக இங்கு அது குறித்து ஆராய வேண்டும்" என்றார். அந்தக் கூட்டத்தில் மத்திய - மாநில உறவுகள் குறித்து, ஆராய வேண்டுமென யோசனை சொன்ன ஒரே முதல்வர் கலைஞர்தான் என, யு.என்.ஐ. ஊடகம் செய்தி வெளியிட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

414

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131